உ

சிவமயம்



# நவதர்சனம்

- கோகுலம் -

சித்தன்கேணி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சமர்ப்பணம்



இவ்வண்ண மலர்க் கொத்தை
இறை பதமடைந்த எங்கள்
இல்லத் தலைவர் சிவ. நவரத்தினம்
அவர்கள் திருவடிகளில் சாத்தி
வணங்குகின்றோம்.

*கோகுலம்*
*சித்தன்கேணி*
*15. 09. 2002*

– குடும்பத்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவமயம்



சித்தன்கேணியை பிறப்பிடமாவும்
வசிப்பிடமாகவும்வரித்துக் கொண்ட

அமரர்

# சிவசுப்பிரமணியம் நவரத்தினம்

அவர்களின்

சிவப்பேறு குறித்த

# நினைவு மலர்

**15.09.2002**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

சிவனடி சேர்ந்த செம்மல்

# சிவ. நவரத்தினம்

அவர்கள்



தோற்றம்
18 ✳ 11 ✳ 1952

மறைவு
16 ✳ 08 ✳ 2002

## திதி நிர்ணய வெண்பா

சீராரும் சித்திரபானு சேர் ஆடிமதி
பேராரும் பூர்வ நவமிதனில் - ஏராரும்
ஏந்தல் நவரத்தின நல்லோன் இபமுகன்தாள்
போந்தார் எனவே புகல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்
கணபதி துணை



# தேவாரம்

ஐந்து கரத்தனை யானை முகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்தனை ஞானக் கொழுந்தினைப்
புந்தியில் வைத்தடி போற்றுகின் றேனே

திருமந்திரம் - திருமூலர்.

முன்னவனே யானை முகத்தவனே முத்திநலம்
சொன்னவனே தூய்மைச் சுகத்தவனே மன்னவனே
சிற்பரனே ஐங்கரனே செஞ்சடையஞ்சோதரனே
தற்பரனே நின் தாள் சரண்.

அருட்பா -இராமலிங்கசுவாமிகள்

பிடியத னுருவுமை கொளமிகு கரியது
வடிகொடு தனதடி வழிபடு மவரிடர்
கடிகண பதிவர வருளினன் மிகுகொடை
வடிவினர் பயில்வலி வலமுறையிறையே.

தேவாரம் - திருஞானசம்பந்தர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருவுங் கல்வியுஞ் சீருந் தழைக்கவுங்
கருணை பூக்கவுந் தீமையைக் காய்க்கவும்
பருவமாய் நம துள்ளம் பழுக்கவும்
பெருகு மாழத்துப் பிள்ளையைப் பேணுவாம்.

விருத்தாசலப் புராணம்

திகட சக்கரச் செம்முக மைந்துளான்
சகட சக்கரத் தாமரை நாயகன்
அகட சக்கர விண்மணி யாவுறை
விகட சக்கரன் மெய்ப்பாதம் போற்றுவாம்.

கச்சியப்பசுவாமி - கந்தபுராணம்

கைத்தல நிறைகனி யப்பமொ டவல்பொரி
கப்பிய கரிமுக னடிபேணிக்
கற்றிடு மடியவர் புத்தியில் லுறைபவ
கற்பக மெனவினை கடிதேகும்
மத்தமு மதியமும் வைத்திடு மரன்மகன்
மற்பொரு திரள்புய மதயானை
மத்தள வயிறனை உத்தமி புதல்வனை
மட்டவிழ் மலர்கொடு பணிவேனே
முத்தமி ழடைவினை முற்படு கிரிதனில்
முற்பட எழுதிய முதல்வோனே
முப்புர மெரிசெய்த அச்சிவ னுறைரதம்
அச்சது பொடிசெய்த அதிதீரா
அத்துய ரதுகொடு சுப்பிர மணிபடும்
அப்புன மதனிடை யிபமாகி
அக்குற மகளுட னச்சிறு முருகனை
அக்கண மணமருள் பெருமாளே.

- திருப்புகழ் - அருணகிரிநாதர்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

உ

# ஔவையார் அருளிச் செய்த
# விநாயகர் அகவல்

சீதக் களபச் செந்தா மரைப்பூம்
பாதச் சிலம்பு பலவிசை பாடப்
பொன்னரை ஞாணும் பூந்துகி லாடையும்
வன்ன மருங்கில் வளர்ந்தகப் கெறிப்பப்
பேழை வயிறும் பெரும்பாரக் கோடும்
வேழ முகமும் விளங்குசிந் தூரமும்
அஞ்சு கரமும் மங்குச பாசமும்
நெஞ்சிற் குடிகொண்ட நீல மேனியும்
நான்ற வாயும் நாலிரு புயமும்
மூன்று கண்ணும் மும்மதச் சுவடும்
இரண்டு செவியும் இலங்கு பொன் முடியுந்
திரண்டமுப் புரிநூல் திகழொளி மார்பும்
சொற்பதங் கடந்த துரிய மெஞ்ஞான
அற்புதம் நின்ற கற்பகக் களிறே!
முப்பழ நுகரும் மூஷிக வாகன
இப்பொழு தென்னை யாட்கொள வேண்டித்
தாயா யெனக்குத் தானெழுந் தருளி
மாயாப் பிறவி மயக்கம் மறுத்துத்
திருந்திய முதலைந் தெழுத்தும் தெளிவாய்ப்
பொருந்தவே வந்தென் னுளந்தனிற் புகுந்து
குருவாடி வாகிக் குவலயந் தன்னில்
திருவடி வைத்துத் திறமிது பொருளென
வாடா வகைதான் மகிழ்ந்தெனக் கருளிக்
கோடா யுதத்தாற் கொடுவினை களைந்தே
உவட்டா வுபதேசம் புகட்டியென் செவியில்
தெவிட்டாத ஞானத் தெளிவையுங் காட்டி
ஐம்புலன் றன்னை யடக்கு முபாயம்
இன்புறு கருணையின் இனிதெனக் கருளிக்
கருவிக ளொடுங்கும் கருத்தினை யறிவித்து


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருவினை தன்னை யறுதிருள் கடிந்து
தலமொரு நான்குந் தந்தெனக் கருளி
மலமொரு மூன்றின் மயக்க மறுத்தே
ஒன்பது வாயில் ஒருமந் திரத்தால்
ஐம்புலக் கதவை யடைப்பதுங் காட்டி
ஆறா தாரத் தங்குச நிலையும்
பேறா நிறுத்திப் பேச்சுரை யறுத்தே
இடைபிங் கலையி னெழுத்தறி வித்துத்
கடையிற் கழுமுனைக் கபாலமுங் காட்டி
மூன்று மண்டலத்தின் முட்டிய தூணின்
நான்றெழு பாம்பின் நாவில் உணர்த்திக்
குண்டலியதனிற் கூடிய வசபை
விண்டெழு மந்திரம் வெளிப்பட வுரைத்து
மூலாதாரத்தின் மூண்டெழு கனலைக்
காலா லெழுப்புங் கருத்தறி வித்தே
அமுத நிலையும் ஆதித்தன் இயக்கமுங்
குமுத சகாயன் குணத்தையுங் கூறி
இடைச் சக்கரத்தின் ஈரெட்டு நிலையும்
உடற் சக்கரத்தின் உறுப்பையுங் காட்டிச்
சண்முகதூலமுஞ் சதுர்முக சூர்க்மமும்
புரியட்டகாயம் புலப்பட வெனக்குத்
தெரியட்டு நிலையுந் தெரிசனப்படுத்திக்
கருத்தினிற் கபால வாயில் காட்டி
இருத்தி முத்தி யினிதெனக்கருளி
என்னை யறிவித் தெனக்கருள் செய்து
முன்னை வினையின் முதலைக்களைந்தே
வாக்கும் மனமும் இல்லா மனோலயம்
தேக்கியே எந்தன் சிந்தை தெளிவித்து
இருள் வெளி இரண்டிற்கு ஒன்றிடம் என்னை
அருள் தரும் ஆனந்தம் தழுத்தி என் செவியில்
எல்லை இல்லா ஆனந்தம் அளித்து
சத்தத்தி னுள்ளே சதாசிவம் காட்டி
சித்தத்தித்தி னுள்ளே சிவலிங்கம் காட்டி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அணுவிற் கணுவாய் அப்பாலுக் கப்பாலாய்க்
கணுமுற்றி நின்ற கம்புள்ளே காட்டி
வேடமும் நிறும் விளங்க நிறுத்தி
கூடும் மெய்த் தொண்டர் குழாத்துடன் கூட்டி
அஞ்சக் கரத்தின் அரும்பொருள் தன்னை
நெஞ்சக் கரத்தின் நிலையறி வித்துத்
தத்துவ நிலையைத் தந்தெனை யாண்ட
வித்தக விநாயக விரைகழல் சரணே

திருச்சிற்றம்பலம்

******

காசிப முனிவர் அருளிய

**காரியசித்திமாலை**

பந்தம் அகற்றும் அநந்தகுணப்
பரப்பும் எவன் பால் உதிக்குமோ
எந்த உலகும் எவனிடத்தில்
ஈண்டி இருந்து கரக்குமோ
சந்த மறை ஆகமங் கலைகள்
அனைத்தும் எவன்பால் தகவருமோ
அந்தஇறையாம் கணபதியை
அன்பு கூரத் தொழுகின்றோம்.

உலகம் முழுதும் நீக்கமற
ஒன்றாய் நிற்கும் பெருளெவனவ்
வுலகிற் பிறக்கும் விகாரங்கள்
உறாத மேலாம் ஒளியானவன்
உலகம் புரியும் வினைப்பயனை
ஊட்டுங் களைகண் எவன் அந்த
உலகம் முதலைக் கணபதியை
உவந்து சரணம் அடைகின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடர்கள் முழுவதும் எவனருளால்
எரிவீழும்பஞ் செனமாயும்
தொடரும் உயிர்கள் எவனருளால்
சுரர்வாழ் பதியும் உறச்செய்யும்
கடவுள் முதலோர்க் கூறின்றிக்
கருமம் எவனால் முடிவுறும் அத்
தடவுமருப்புக் கணபதிபொன்
சரணம் சரணம் அடைகின்றோம்.

மூர்த்தி யாகித் தலமாகி
முந்நீா கங்கை முதலான
தீர்த்த மாகி அறிந்தறியாத்
திறத்தி னாலும் உயிர்க்கு நலம்
ஆர்த்தி நாளும் அறியாமை
அகற்றி அறிவிப் பான் எவன் அப்
போர்த்த கருணைக் கணபதியைப்
புகழ்ந்து சரணம்அடைகின்றோம்.

செய்யும் வினையின் முதல்யாவன்
செய்யப் படும் அப் பொருள்யாவன்
ஐயம் இன்றி உளதாகும்
அந்தக் கருமப் பயன் யாவன்
உய்யும் வினையின் பயன் விளைவில்
ஊட்டி விடுவிப்பான் எவன் அந்தப்
பொய்யில் இறையைக் கணபதியைப்
புரிந்து சரணம் அடைகின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வலி மேற்கு கலாசார பேரவையின் இசை விழாவில்
சி.நவரட்ணம் அவர்கள் உரையாற்றும் நிகழ்வு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேதம் அளந்தும் அறிவரிய
விகிர்தன் யாவன் விழுத்தகைய
வேத முடிவில் நடம்நவிலும்
விமலன் யாவன் விறங்குவர
நாத முடிவில் வீற்றிருக்கும்
நாதன் எவன் எண்குணன் எவன் அப்
போத முதலைக் கணபதியைப்
புகழ்ந்து சரணம் அடைகின்றோம்.

மண்ணில் ஓர்ஐங் குணமாகி
வதிவான் எவன் நீர், இடைநான் காய்
நண்ணி அமர்வான் எவன் தீயின்
முன்றாய் நவில்வான் எவன் வளியின்
எண்ணும் இரண்டு குணமாகி
இயைவான் எவன்வான் இடைஒன்றாம்
அண்ணல் எவன் அக்கணபதியை
அன்பிற் சரணம் அடைகின்றோம்.

பாச அறிவில் பசு அறிவில்
பற்றற் கரிய பரன் யாவன்
பாச அறிவும் பசு அறவும்
பயிலப் பணிக்கும் அவன்யாவன்
பாச அறிவின் பசு அறிவும்
பாற்றி மேலாம் அறிவான
தேசன் எவன் அக்கணபதியைத்
திகழச் சரணம் அடைகின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2

நூற்பயன்

இந்த நமது தோத்திரத்தை
யாவன் மூன்று தினமும் உம்மைச்
சந்தி களில் தேத்திரஞ் செயினும்
சகல கரும சித்திபெறும்
சிந்தை மகிழச் சுகம் பெறும் எண்
தினம் உச்சரிக்கின் சதுர்த்தியிடைப்
பந்தம் அகல ஓர் எண்கால்
படிக்கில் அட்ட சித்தியுறும்

திங்கள் இரண்டும் தினந்தோறும்
திகழஒருபான் முறையோதில்
தங்கும் அரச வசியமாம்
தயங்க இருபத் தொருமுறைமை
பொங்கு உழுவ லால் கிளப்பின்
பொருவின் மைந்தர் விழுக்கல்வி
துங்க வெறுக்கை முதற்பலவும்
தோன்றும் எனச்செப்பினர் மறைந்தார்.

திருச்சிற்றம்பலம்

## பிள்ளையார் பஜனைப் பாடல்கள்

1. ஐந்து கரத்தோனே வா வா வா
ஆனைமுகப் பிள்ளையாரே வா வா வா
தொந்திக் கணபதியே வா வா வா
தூயர் உள்ளம் கோயில் கொண்டாய் வா வா வா
(ஐந்து கரத்தோனே)

தூங்கக் கரிமுகனே வா வா வா
துன்பம் துயர் தீர்த்திடவே வா வா வா
மாணிக்கப்பிள்ளையாரே வா வா வா
மாங்கனி பெற்றவரே வா வா வா
(ஐந்து கரத்தோனே)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விக்ன விநாயகரே வா வா வா
விக்கினங்கள் போக்கிடவே வா வா வா
சிந்தையில் உனை நினைக்க வா வா வா
சித்தம் தெளியுமப்பா வா வா வா
(ஐந்து கரத்தோனே)

அனுதினமும் உனை நினைத்தேன் வா வா வா
அருளமுதம் தந்திடவே வா வா வா
உன் பாதம் தொழுது நின்றேன் வா வா வா
எங்கள் பாவம் தொலைந்திடவே வா வா வா
(ஐந்து கரத்தோனே)

அன்பர் உள்ளம் கோயில் கொண்டாய் வா வா வா
அம்பிகையின் பாலகனே வா வா வா

2. பிள்ளையார் பிள்ளையார் பெருமை வாய்ந்த பிள்ளையார்
பிள்ளையார்பிள்ளையார்எம்மைக் காக்கும் பிள்ளை யார்
ஆற்றங்கரை மீதிலே அரசமர நிழலிலே
வீற்றிருக்கும் பிள்ளையார் வினைகள் தீர்க்கும் பிள்ளையார்
யானை முகம் கொண்டவர் ஐந்து கரங்கள் உடையவர்
பானை வயிறு படைத்தவர் பக்தர் குறைதீர்ப்பவர்
அவால் கடலை சுண்டலும் அரிசிக் கொடுக்கட்டையும்
கவலையின்றித் தின்னுவார், கண்ணை மூடித்தூங்குவார்
கல்லினாலே செய்யினும் மண்ணினாலே செய்யினும்
ஐந்தெழுத்து மந்திரத்தை நெஞ்சில் நாட்டும் பிள்ளையார்
நேரும் துன்பம் யாவையும் நீக்கி வைக்கும் பிள்ளையார்
கலியுகத்தில் எம்மையே காக்க வேண்டி நேரினும்
எலியின் மீது ஏறியே இஷ்ட போலச் சுற்றுவார்
பாடிப்புகழும் பத்தரின் பாவம் தீர்க்கும் பிள்ளையார்
கூடிப்பாடும் தொண்டரின் குறைகள் தீர்க்கும் பிள்ளையார்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. கஜமுக கணபதி சரணம் சரணம்
கணேச வரதா சரணம் சரணம்
சக்திக் கணபதி சரணம் சரணம்
கணபதி கணபதி நின்தாள் சரணம் சரணம்

முத்திகொடுப்பவனே சரணம் சரணம்
முன்பிறந்தோனே சரணம் சரணம்
சிவசிவ கணேசா சரணம் சரணம்
நிகழ மாமுகனே சரணம் சரணம்
கோபாலன் மருகா சரணம் சரணம்
ஆதிதேவா சரணம் சரணம்
சிவன் புகழ் பாலகா சரணம் சரணம்
சித்தி விநாயகா சரணம் சரணம்
ஓங்கார ரூபா சரணம் சரணம்
ஆறுமுகன் அண்ணா சரணம் சரணம்

4. அருள் படைத்த வினாயகா வா வா வா
அம்மை கௌரி பாலகா வா வா வா
பொருள் ஞானியே வா வா வா
புகழ் படைத்த மேனியாய் வாவா வா
தெளிவு படைத்த வினாயகா வா வா வா
திறமை கொண்ட காவலா வா வா வா
விக்ன விநாயகனே வா வா வா
வினைகள் எல்லாம் தீர்த்தருள்வாய் வா வா வா
முப்புரம் எரித்தவனே வா வா வா
முந்த வந்து உவந்தவனே வா வா வா
அன்பர் உள்ளம் அறிந்தவனே வா வா வா
அடியார் அல்லல் தீர்த்திடுவாய் வா வா வா
கஜமுக வினாயகனே வா வா வா
கருணை உள்ளம் படைத்தவனே வா வா வா
சித்தி வினாயகனே வா வா வா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவன் புகழ் பாலகனே வா வா வா
ஆனந்தமுடன் ஆடியே வா வா வா
ஆசையுடன் வந்திடுவாய் வா வா வா
மகோற்கட வினாயகனே வா வா வா
கோபால மருகனே வா வா வா
உடுண்டி வினாயகனே வா வா வா
உன்புகழ் பாடியே வாழ்ந்திடுவோம் வா வா வா

5. ஓம் ஓம் கணபதி சரணம் சரணம்
ஓங்கார கணபதி சரணம சரணம்
கஜமுககணபதி சரணம் சரணம்
கதிர்வேல் அண்ணா சரணம் சரணம்
விக்ன வினாயகா சரணம் சரணம்
வேழ முகத்தவனே சரணம் சரணம்
மூசிக வாகன சரணம் சரணம்
முழுமுதற் பொருளே சரணம் சரணம்
சிவசிவ கணபதி சரணம் சரணம்
செல்லக் கணபதி சரணம் சரணம்
ஐந்து கரனே சரணம் சரணம்
ஆனை முகனே சரணம் சரணம்
சரணம் சரணம் கணபதி சரணம்

6. கௌரி நந்தன கஜவதனா
கணேச வரதா மாம்பாகி
அம்பிகை பாலா அன்பர்கள் சீலா
தும்புறு நாரத சேவித லோலா
(கௌரி)

பாரதம் எழுதிய பரம சாழத்திரா
ஆரமுது அருளிய ஐங்கர சித்திரா
லம்போதர கங்காதர புத்திரா
அம்பாமுக பங்கேருக மித்திரா
(கௌரி)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கஜமுக்த தரசே கணபதியே
கற்பகத் தருவே குண நிதியே
அரகர அரகர ஆதியனே
அரணருள் வினாயக சோதியனே
(கௌரி)

பிரணவப் பொருளே பெம்மானே
பேசரு மறைபுகழ் எம்மானே
இப மாமுகனே இகமா வரதா
கப மாகவுமே சுமுகா அருள்வாய்
பஜீ ஜெய சீல வினாயகனே

### தேவாரம்

#### திருக்கேதீச்சரம்

நத்தார் படை ஞானன்பசு ஏறிந்நனை கவிழ்வாய்
மத்தம்மத யானை உா போர்த்தமண வாளன்
பத்தாகிய தொண்டர் தொழு பாலாவியின் கரைமேல்
செத்தார்எலும் பணிவான்திருக் கேதீச்சரத் தானே.

#### திருக்கோணமலை

நிரைகழல் அரவஞ் சிலம்பொலி யலம்பும்
நிமலர்நீ றணிதிரு மேனி
வரைகெழு மகளோர் பாகமாப் புணர்ந்த
வடிவினர் கொடியணி விடையர்
கரைகெழு சந்துங் கா ரைநிற் பிளவும்
அளப்பரும் கனமணி வரன்றிக்
குரைகடல் ஓதம் நித்திலங் கொழிக்குங்
கோணமாமலையமர்ந் தாரே.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### சிதம்பரம்

குனித்த புருவமும் கொவ்வைச் செவ்வாயிற் குமிண்
சிரிப்பும்
பனித்த சடையும் பவளம்போல் மேனியிற் பால்
வெண்ணீறும்
இனித்த முடைய எடுத்தபொற் பாதமுங் காணப்பெற்றால்
மனித்தப் பிறவியும் வேண்டு வதேஇந்த மாநிலத்தே.

### திருவாசகம்

அம்மையே அப்பா ஒப்பிலா மணியே
அன்பினில் விளைந்த ஆரமுதே
பொய்ம்மையே பெருக்கிப் பொழுதினைச் சுருக்கும்
புழுத்தனைப் புலையனேன் தனக்குச்
செம்மையே யாய சிவபதமிளத்த
செல்வமே சிவபெருமானே
இம்மையே யுன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந்தருளுவதினியே.

### திருவிசைப்பா

கற்றவர் விளங்குங் கற்பகக் கனியைக்
கரையிலாக் கருணைமா கடலை
மற்றவர் அறியா மாணிக்க மலையை
மதிப்பவர் மனமணி விளக்கைச்
செற்றவர் புரங்கள் செற்றஎம் சிவனைத்
திருவீழி மிழலைவீற் றிருந்த
கொற்றவன் றன்னைக் கண்டுகண்டுள்ளம்
குளிர என் கண்குளிர்ந்தனவே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்பல்லாண்டு

பாலுக்கு பாலகன் வேண்டி அழுதிடப்
பாற்கடல் ஈந்தபிரான்
மாலுக்குச் சக்கரம் அன்றருள் செய்தவன்
மன்னிய தில்லைதன்னுள்
ஆலிக்கும் அந்தணர் வாழ்கின்ற
சிற்றம்பலமே இடமாகப்
பாலித்து நட்டம் பயிலவல்லானுக்கே
பல்லாண்டு கூறுதுமே.

## திருப்புராணம்

உலகெலாம் உணர்ந் தோதற் கரியவன்
நிலவு லாவிய நீர்மலி வேணியன்
அலகில் சோதியன் அம்பலத் தாடுவான்
மலர்சி லம்படி வாழ்த்தி வணங்குவாம்

## திருப்புகழ்

உம்பர் தரு தேனுமணிக் கசிவாகி
ஒண் கடலில் தேனமுதத் துணர்வூதி
இன்பரசத்தே பருகிப் பலகாலும்
எந்தனுயிர்க்காதரவுற் றருள்வாயே
தம்பி தனக்காக வனத் தணைவோனே
தந்தை வலத்தாலருள்கைக் கனியோனே
அன்பர் தமக்கான நிலைப் பொருளோனே
ஐந்து கரத்தானைமுகப் பெருமாளே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாணிக்கவாசக சுவாமிகள் அருளிய

# திருவாசகம்

தொல்லை இரும் பிறவி ச் சூழும் தளைநீக்கி
அல்லலறுத் தானந்தம் ஆக்கியதே - எல்லை
மருவா நெறி அளிக்கும் வாதவூர் எங்கோன்
திருவாசகம்என்னும் தேன்.

## சிவபுராணம்

நமச்சிவாய வா ழ்க நாதன்தாள் வாழ்க
இமைப்பொழுதும் என்நெஞ்சி னீங்காதான் தாள்வாழ்க
கோகழி யாண்ட குருமணிதன் தாள் வாழ்க
ஆகம மாகிநின் றண்ணிப்பான் தாள்வாழ்க
ஏகன் அனேகன் இறைவன் னடிவாழ்க
வேகங் கெடுத்தாண்ட வேந்த னடிவெல்க
பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்றன் பெய்கழல்கள் வெல்க
புறத்தார்க்குச் சேயோன்றன் பூங்கழல்கள் வெல்க
கரங்குவிவார் உள்மகிழுங் கோன்கழல்கள் வெல்க
சிரங்குவிவார் ஓங்குவிக்குஞ் சீரோன் கழல்வெல்க
ஈசனடி போற்றி எந்தையடி போற்றி
தேச னடி போற்றி சிவன்சே வடிபோற்றி
நேயத்தே நின்றநிமல னடிபோற்றி
மாயப் பிறப்பறுக்கும் மன்ன னடிபோற்றி
சீரார் பெருந்துறைநம் தேவ னடிபோற்றி
ஆராத இன்பம் அருளு மலைபோற்றி
சிவனவன்என் சிந்தையுள் நின்ற அதனால்
அவனரு ளாலே அவன்தாள் வணங்கிச்
சிந்தை மகிழச் சிவபுரா ணந்தன்னை
முந்தை வினைமுழுது மோய உரைப்பனியான்
கண்ணுதலான் தன்கருணைக் கண்காட்ட வந்தெய்தி
எண்ணுதற் கெட்டா எழிலார் கழலிறைஞ்சி
விண்ணிறைந்து மண்ணிறைந்து மிக்காய் விளங்கொளியாய்
எண்ணிறைந் தெல்லை யிலாதானே நின்பெருஞ்சீர்
பொல்லா வினையேன் புகழுமா றொன்றறியேன்.
புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல்விருக மாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல்லசுர ராகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லாஅ நின்றஇத் தாவர சங்கமத்துள்
எல்லாப்பிறப்பும் பிறந்திளைத்தேன் எம்பெருமான்
மெய்யே உன் பொன்னடிகள் கண்டின்று வீடுற்றேன்
உய்ய என் உள்ளத்துள் ஓங்கார மாய் நின்ற
மெய்யா விமலா விடைப்பாகா வேதங் கொள்
ஐயா எனஓங்கி ஆழ்ந்தகன்ற நுண்ணியனே
வெய்யாய் தணியாய் இயமானனாம் விமலா
பொய்யாயின வெல்லாம் போயகல வந்தருளி
மெய்ஞான மாகி மிளிர்கின்ற மெய்ச்சுடரே
எஞ்ஞானம் இல்லாதேன் இன்பப் பெருமானே
அஞ்ஞானம் தன்னை அகல்விக்கும் நல்லறிவே
ஆக்கம் அளவுறுதி இல்லாய் அனைத்துலகும்
ஆக்குவாய் காப்பாய் அழிப்பாய் அருள்தருவாய்
போக்குவாய் என்னைப் புகுவிப்பாய் நின்தொழும்கில்
நாற்றத்தின் நேரியாய் சேயாய் நணியானே
மாற்றம் மனங்கழிய நின்ற மறையோனே
கறந்தபால் கன்னலொடு நெய்கலந்தாற் போலச்
சிறந்தடியார் சிந்தனையுள் தேனூறி நின்று
பிறந்த பிறப்பறுக்கும் எங்கள் பெருமான்
நிறங்களோ ரைந்துடையாய் விண்ணோர்க ளேத்த
மறைந்திருந்தாய் எம்பெருமான் வல்வினையேன் தன்னை
மறைந்திட மூடிய மாய இருளை
அறம்பாவம் என்னும் அருங்கயிற்றாற் கட்டிப்
புறந்தோல் போர்த்தெங்கும் புழுவழுக்கு மூடி
மலஞ்சோரும் ஒன்பது வாயிற் குடிலை
மலங்கப் புலைனைந்தும் வஞ்சனையைச் செய்ய
விலங்கு மனத்தால் விமலா உனக்குக்
கலந்தஅன் பாகிக் கசிந்துள் ளுருகும்
நலந்தான் இலாத சிறியேற்கு நல்கி
நிலந்தன் மேல் வந்தருளி நீள்கழல்கள் காட்டி
நாயிற் கடையாய்க் கிடந்த அடியேர்க்குத்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாயிற் சிறந்த தயாவான தத்துவனே
மாசற்ற சோதி மலர்ந்த மலச்சுடரே
தேசனே தேனா ரமுதே சிவபுரனே
பாசமாம் பற்றறுத்துப் பாரிக்கும் ஆரியனே
நேச அருள்புரிந்து நெஞ்சில்வஞ் சங்கெடப்
பேராது நின்ற பெருங்கருணைப் பேராறே
ஆரா அமுதே அளவிலாப் பெம்மானே
ஓராதார் உள்ளத் தொளிக்கும் ஒளியானே
நீராய் உருக்கியென் ஆருயிராய் நின்றானே
இன்பமுந் துன்பமும் இல்லானே உள்ளானே
அன்பருக்கு கன்பனே யாவையுமாய் அல்லையுமாஞ்
சோதியனே துன்னிருளே தோன்றாப் பெருமையனே
ஆதியனே அந்தம் நடுவாகி அல்லானே
ஈர்த்தென்னை யாட்கொண்ட எந்தை பெருமானே
கூர்த்த மெய்ஞ்ஞானத்தாற் கொண்டு ணர்வார் தங்கருத்தின்
நோக்கரிய நோக்கே நுணுக்கரிய நுண்ணுணர்வே
போக்கும்வரவும் புணர்வுமிலாப் புண்ணியனே
காக்குமெங் காவலனே காண்பரிய பேரொளியே
ஆற்றின்ப வெள்ளமே அத்தாமிக் காய்நின்ற
தோற்றச் சுட ரொளியாய்ச் சொல்லாத நுண்ணுணர்வாய்
மாற்றமாம் வையகத்தின் வெவ்வேறே வந்தறிவாம்
தேற்றனே தேற்றத் தெளிவேஎன் சிந்தனையுள்
ஊற்றான உண்ணா ரமுதே உடையானே
வேற்று விகார விடக்குடம்பி னுட்கிடப்ப
ஆற்றேன் எம் ஐயா அரனேஓ என்றென்று
போற்றிப் புகழ்ந்திருந்து பொய்கெட்டு மெய்யானார்
மீட்டிங்கு வந்து வினைப்பிறவி சாராமே
கள்ளப் புலக்குரம்பை கட்டழிக்க வல்லானே
நள்ளிருளில் நட்டம் பயின்றாடும் நாதனே
தில்லையுட் கூத்தனே தென்பாண்டி நாட்டானே
அல்லற் பிறவி அறுப்பானே ஓவென்று
சொல்லற் கரியானை சொல்லித் திருவடிக்கீழ்ச்
சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தின் உள்ளார் சிவனடிக்கீழ்ப்
பல்லோரும் ஏத்தப் பணிந்து.

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சைவமக்களின் விசேட தினங்கள்

'அரிது அரிது மானிடராதல் அரிது' என்று ஔவை மூதாட்டி கூறி இருக்கின்றார். அந்தவகையில் மானிடராக பிறந்தவர்கள் எல்லோரும் நல்லவகையில் வாழ்வதில்லை. நாம் நல்ல முறையில் வாழ்வதற்கு எமக்கு புராணங்கள், இதிகாசங்கள் ஊடாக பல வழிகள் கூறப்பட்டுள்ளது. அது மாத்திரம் இல்லாமல் ஒவ்வொரு மாதத்திலும் வரும் திதி, நட்சத்திரத்திற்குரிய தினங்கள் விரதங்களாகவும் விழாக்க ளாகவும் வகுக்கப்பட்டுள்ளது இவை எல்லாம் மனித வாழ்க் கையில் ஆன்மிக நெறியை ஏற்படுத்துவதாக அமைந்து ள்ளது. இவற்றை சைவமக்களாகிய நாம் அறிந்து முறையாக அவற்றை கடைப் பிடித்து வாழ்வை சிறப்பாக்கி கொள்வது சிறந்தது.

## சித்திரை

இது 12 மாதங்களின் சுற்றுவட்டத்தில் முதலாவதாக அமைந்துள்ளது. இதற்கு தனிச்சிறப்பு உண்டு. வருடங்கள் அறுபது . ஒவ்வொரு வருடங்களும் பிறக்கும் மாதமாகவும் அமை கின்றது. இதனையே புதுவருஷப் பிறப்பாக கொண்டாடுகின்றோம். பன்னிரண்டு ராசிகளிலும் முதல் ராசியாகிய மேடராசிக்குள் சூரிய பகவான் பிரவேசிக்கும் காலம் இந்த சித்திரை முதல் நாள் தான் . அதனால்தான் புதுவருஷ பிறப்பன்று சூரியபகவானுக்கு பொங்கலிட்டு வணங்குகின்றோம். அன்றைய தினம் மருத்து நீர் தேய்த்து ஸ்நானம் செய்து புத்தாடைகள் அணிந்து பூரண கும்பங்கள் வைத்து, பொங்கி பூசைகள் செய்து உறவினர்களுடன் கொண்டாடி மகிழ்கின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சித்திரை பூரணை

பூரணை ஒவ்வொரு மாதத்திலும் வருகின்ற ஒரு தினம் . சித்திரை மாதத்தில் வருகின்ற பூரணை தலைப்பூரணை யாகவும் , சித்திரகுப்த நாயனார் அவதாரம் செய்த நாளா கவும் கருதப் படுகிறது. அன்றைய தினம் விரதம் அனுஷ்டித்து, முக்கியமாக தாயை இழந்தவர்கள் அவசியம் விரதம் அனுஷ்டிக்க வேண்டும். சித்திரகுப்தநாயனார் கதை படித்து சித்திரைக்கஞ்சி காய்ச்சி வழிபட்டு ஆத்ம சாந்தி பூசை செய்வர் .

## சித்திரை திருவோணம்

சிதம்பரத்திரலே ஆனந்த தாண்டவம் ஆடுகின்ற தில்லைநடராஜப் பெருமானுக்கு வருடத்திலே 6 அபிஷே கங்கள் நடைபெறுகிறது. அதிலே முதலாவது அபிஷேகம் சித்திரை திருவோணத்தில் அமைகிறது. இவ்விரதம் அனுஷ்டிப்பதினால் தாம்பத்ய வாழ்வு உயர்வடையும். குடும்பம் மகிழ்ச்சியாக வாழ வழி வகுக்குகின்றது.

## வைகாசி

### வைகாசி விசாகம்

இது முருகப்பெருமானின் வழிபாட்டிற்கு உகந்த தினம். சிவனாரின் ஐம்பொறிகளில் இருந்து ஐந்து ஒளிப்பிளம்புகளும், மனதில் இருந்து மற்றொரு ஒளிப்பிளம்புமாக ஆறு ஒளிப்பிளம்புகள் தோன்றி கங்கை மூலம் சரவணக் காட்டில் உள்ள சரவணப் பொய்கையில் வீழ்ந்தன. ஒளிப்பிளம்புகள் ஆறுதெய்வக் குழந்தைகளாகி கார்த்திகை பெண்களால் வளர்க்கப்பட்டு, பின் ஆறு குழந்தைகளும் ஒன்றாகி சண்முக ராகிய தினமே வைகாசி விசாகமாகும். இத் தினத்தில் விரதம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனுஷ்டித்து முருகனுக்கு உகந்த கடம்ப மலரால் அர்ச்சித்து வழிபாடு செய்தால் திருமணம், குழந்தைப்பேறு பாக்கியம் கிட்டும். தீராத பிணிகள் தீரும்.

## ஆனி

### ஆனி உத்தரம்

தில்லையம் பதியில் நடராஜப் பெருமான் திரு நடனம் புரிந்த தினமாகும். இத்த திருநடனத்தின் மூலம் படைத்தல், காத்தல், அழித்தல், அருளல், மறைத்தல் ஆகிய ஐந்தொழில் களையும் புரிகின்றார். இத்தினம் நடேசர் அபிசேஷக தின மாகும் இத்தினம் நடராஜர் தரிசனத்திற்கு சிறந்த நாளாகும்.

## ஆடி

### ஆடிப்பிறப்பு

ஆடி மாதம் தெட்சணனாய காலத்தின் ஆரம்பமாகும் விவசாயத்திற்கு வேண்டிய மழைபெய்ய ஆரம்பிக்கும் காலம் ஆதலால் விவசாயிகள் மகிழ்ச்சியாக வரவேற்பர். இதனால் ஆடிப்பிறப்பு முக்கியத்துவம் பெறுகிறது.

### ஆடிச் செவ்வாய்

'ஆடிச்செவ்வாய் தேடிப்பிடி' என்று கிராம வழக்கில் பெரியவர்கள் கூறுவார்கள் . அம்பாள் வழிபாட்டிற்கு உகந்தது. செவ்வாய்க்கிழமைகளில் கன்னிப்பெண்கள், செவ்வாய் தோஷம் உள்ளவர்கள் விரதம் அனுஷ்டித்து அம்பாளுக்கு தேசிப்பழ மாலை அணிவித்து தேசிப்பழத்தில் விளக்கேற்றி வழிபாடு செய்வ தனால் மாங்கல்ய பாக்கியம் கைகூடும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆடி அமாவாசை

இத்தினத்தில் தந்தையை இழந்தவர்கள் விரதம் அனுஷ்டித்து தர்ப்பணம் செய்து, தானங்கள் கொடுத்து தமது பிதிர்க்கடன்களை நிறைவேற்றுவர். இதனால் பிதிர் தோஷம் நீங்கும்.

## ஆடிப்பூரம்

அன்னை பார்வதி தேவியின் ருது தினமாகும் இத்தினத்தில் விரதம் அனுஷ்டித்து, பயபக்தியுடன் திரு விளக்கு பூசை செய்பவர்களுக்கு மாங்கல்ய பாக்கியம், மாங்கல்யபலம் சுக வாழ்வுகிட்டும். வளர்பிறை இரண்டாவது வெள்ளிக்கிழமை வரலட்சுமி விரதமாகும்.

# ஆவணி

## ஆவணி சதுர்த்தி

பிரணவத்தில் இருந்து விநாயகர் வெளிப்பட்ட தினம் ஆவணிச்சதுர்த்தியாகும். இது பூர்வபக்க சதுர்த்தி திதியில் வரும் முக்கிய தினமாகும். இத்தினத்தில் பாண்டவர்கள் கௌரவர்களை வென்று தங்கள் நாட்டை பெற்றார்கள். இராமபிரான் சீதையை மீட்டதும் இத்தினத்தில்தான். இத்தினத்தில் விரதம் அனுஷ்டித்து விநாயகனை வழிபாடு செய்தால் விக்கினங்கள் நிங்கி சித்திகளும் கைகூடும்.

## ஆவணி சதுர்த்தசி

நடராஜப்பெருமானின் ஆறு அபிஷேகத் தினங்களில் இதுவும் ஒன்றாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### ஆவணி மூலம்

பாண்டிய மன்னனால் சிறையில் இடப்பட்டிருந்த மாணிக்க வாசக சுவாமிகளை விடுவிப்பதற்காக எம்பெருமான் நரிகளைப் பரிகளாக்கிய நாளாகியதால் இத்தினம் சிறப்புப் பெறுகிறது.

### ஆவணி ஞாயிறு

ஆவணி மாதத்தில் சூரிய பகவான் சிங்கராசியில் பிரவேசிப்பதால், ஆவணி ஞாயிறு சூரிய பகவான் வழிபாட் டிற்குச் சிறந்த தினமாகிறது.

### கிருஷ்ண ஜயந்தி

இந்த தினம் கிருஷ்ணர் பிறந்த தினமாகும். இது ஆவணி மாதத்தில் அட்டமி திதியும் ரோகிணி நட்சத்திரமும் சேர்ந்து வருகின்ற நாளாகும். அன்றைய தினம் விஷ்ணு ஆலயங்களில் கிருஷ்ணர் பிறப்பு அபிஷேகம், ஆராதனைகளுடன் கொண்டாடப்படுவதுடன், வீடுகளிலும் சிறப்பாக பூசை செய்வதே இதன் சிறப்பு அம்சமாகும். அன்றைய தினத்திற்கு முதல் நாள் வீடுகளிலும் சிறப்பாகப்பூசை செய்வதே இதன் சிறப்பு அம்சமாகும். அன்றைய தினத்திற்கு முதல் நாள் வீடு கழுவி சுத்தம் செய்ய வேண்டும். அதன்பின் வீட்டு வாசலில் இருந்து பூசையறை(சாமியறை) வரை மாவினால் சிறு குழந்தையின் பாதம் காலடி போல் கோலம் போட்டு அடயாளம் இட வேண்டும். இப்படிச் செய்தவது ஏன் என்றால் கிருஷ்ணன் சிறு குழந்தையின் பாதம் காலடி போல் கோலம் போட்டு அடையாளம் இட வேண்டும். இப்படிச் செய்வது ஏன் என்றால் கிருஷணன் சிறு குழந்தையாக(கண்ணன்) நமது வீட்டிற்கு வருகின்றார். என்பதால் கிருஷ்ண ஜெயந்தி தினத்தன்று அவருக்கு பிடித்தமான அவல், புளிச்சாதம் நைவேதனம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்ய வேண்டும். குழந்தை இல்லாதவர்கள் விரதம் அனுஷ்டித்து இந்த முறைகளின்படி பூசை செய்து பயபக்தியுடன் வழிபாடு செய்தால் குழந்தைக்குச் செல்வம் கிடைக்கும் என்பது நிச்சயம்.

## புரட்டாதி

### நவராத்திரி

புரட்டாதி மாத வளர்பிறை பிரதமை தொடக்கம் நவமி ஈறாக வரும் ஒன்பது நாட்களுடன் மறுநாள் விஜயதசமியையும் உள்ளடக்கி கொண்டாடப்படும் விழா நவராத்திரி ஆகும். மனித வாழ்விற்கு வேண்டிய வீரம், செல்வம், கல்வி மூன்றையும் எமக்கு நல்கும் துர்க்கை, லட்சுமி, சரஸ்வதியை வணங்கி வழிபடும் காலமாகும். பத்தாம்நாள் விஜய தசமி. வெற்றியை அளிக்கும் மங்கல வீர நாளாகையால் அரசர்கள் போர் தொடுத்தல், புதுத்தொழில் ஆரம்பித்தல், சிறுபிள்ளைக்கு ஏடுதொடக்குதல் போன்ற காரியங்களை இத்திருநாளில் ஆரம்பிக்கின்றார்கள். நவராத்திரியின் போது முதல் எட்டு நாட்களும் மதியம் உணவு உட்கொள்ளாது இரவுப் பூசை முடித்து பின் பலகாரத்தை உணவாகக் கொண்டு ஒன்பதாம் நாளாகிய நவமியன்று உபவாசமிருந்து விஜய தசமி அன்று பாரணை பண்ண வேண்டும்.

### கேதார கௌரிவிரதம்

இது வாழ்க்கை வளம் பெருக வழிகாட்டும் மிக உன்னதமான விரதமாகும். புரட்டாதிமாத வளர்பிறை தசமியில் ஆரம்பித்து ஐப்பசி மாத தேய்பிறை தீபாவளி அமாவாசை வரையில் உள்ள 21 நாட்கள் அனுஷ்டிக்கும் விரதமாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org
4

உமாதேவியார் சிவபெருமானை நோக்கி சிவபூசை செய்து அர்த்தநாரீஸ்வரர் பேற்றினை (சிவபெருமானின் சரிபாதி) பெற்ற விரதமாகும். இதனால் தான் இவ்விரதம் கேதார கௌரிவிரதம் எனப்படுகின்றது. இவ்விரதத்தை அனுஷ்டிக்கும் கன்னிப் பெண்கள் திருமண பலனையும், சுமங்கலிகள் மாங்கல்ய பலனையும், ஆண்களுக்கு மங்களகரமான வாழ்க்கையும் அமை யும். இவ்விரத நிறைவு நாளன்று 21 இலைகளைக் கொண்ட நூலில் 21 முடிச்சிட்டு குருக்களைக் கொண்டு ஆண்கள் வலது கையிலும், பெண்கள் இடது கையிலும் அணிந்து கொள்வர்.

### மஹாளயபட்சம்

இது புரட்டாதி அமாவாசைக்கு 15 நாட்களுக்கு முன்பு தொடங்கும். பிதிர்களை நினைத்து ஆத்மசாந்திக்காகச் செய்யும் பிண்டதான தினமாகும்.

### புரட்டாதிச் சனி

புரட்டாதி மாத சனிக்கிழமைகளில் சனீஸ்வரனை வழிபடு வதால் மேலான பலன்கள் கிடைக்கும்

### புரட்டாதி வளர்பிறை சதுர்த்தசி

நடராஜப் பெருமானின் ஆறு அபிஷேகதினங்களில் ஒன்றாகக் கருதப்படுகிறது.

## ஐப்பசி

### தீபாவளி

ஐப்பசி அமாவாசைக்கு முதல் நாளாகிய சதுர்த்தசி பொருந்திய காலம் தீபாவளி. தீபங்களை வரிசையாக வைத்து பூஜிக்கப்படும் நாள். இப்படி வழிபடுவதால் அக இருள் நீங்கிய


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடத்தில் இன்பம் ஏற்படும். எமது மனத்தில் அகஇருள் ஏற்பட்டால் எல்லாவற்றையும் மறைத்து பெருந்துயரத்தை ஏற்படுத்தும். அதுமன்றி இந்தத் தீபாவளித் திருநாள் நரகாசுரன் என்ற கொடிய அரக்கனை பகவான் சம்ஹாரம் செய்த நாளாகவும் அமைகிறது. பகவான் அவனை அழித்த நேரத்தில் இறக்கும் பொழுதில் அவனுக்கு ஞானம் ஏற்பட்டது 'பகவானே என் அகந்தை அழிந்தது. உங்களைக் கண்டு கொண்ட இந்நாளை எல்லோரும் நினைவுகூர்ந்து மகிழ்ச்சி யாகக் கொண்டாட வேண்டும்" எனக்கேட்டுக் கொண்ட தாகவும் ஐதீகம். இந்நாளில் ஸ்நானம் செய்து புத்தாடைகள் அணிந்து கொண்டாடுவது மாத்திரமன்றி விஷ்ணுவைத் தரிசனம் செய்து வழிபடுவோருக்கு வைகுண்ட மோட்சம் கிடைக்கும்.

### ஐப்பசி வெள்ளி

ஒவ்வொருமாதத்திலும் வரும் வெள்ளிக்கிழமைகளிலும் மேலானது ஐப்பசி வெள்ளி. முருகனை நினைத்து பூசை , வழிபாடுகள் செய்வதால் செல்வம் நீண்ட ஆயுள், ஆரோக்கியம் கைகூடும்.

### கந்தர் சஷ்டி

ஐப்பசி மாத அமாவாசைக்கு அடுத்த பிரதமை முதல் சஷ்டி ஈறாக வரும் ஆறு நாட்களும் முருகனை நினைத்து அனுஷ்டிக்கும் விரதம் கந்தர் சஷ்டி ஆகும். அசுரர்களிட மிருந்து தேவர்களைக் காப்பாற்றும் பொருட்டு சூரபத்மனைச் சங்காரம் செய்த நாளும் இதுவாகும். இவ்விரத ஆறு நாட்களும் காலையில் நீராடி, முருகப்பெருமானை வழிபட்டு நீர்மட்டும் அருந்தி உபவாசமிருந்து ஏழாம்நாள் பாரணை செய்து விரதத்தை பூர்த்தி செய்ய வேண்டும். முருகப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெருமானின் விரதங்களில் இவ்விரதம் மிக முக்கியத்துவம் வாய்ந்ததாகவும் மேலானதாகவும் அமைகிறது. இவ்விரதம் தொடர்ந்து ஆறு வருடங்கள் அனுஷ்டிக்க வேண்டும். இதனை முறைப்படி அனுஷ்டித்தால் குழந்தைச் செல்வம் இல்லாத வர்கள் குழந்தைச் செல்வம் கிடைக்கப்பெறுவர். மு - என்றால் முகுந்தன், ரு- என்றால் ருத்திரன், கா - என்றால் பிரம்மா இதனால் 'முருகா' என்ற நாமத்தை சொல்வதால் மூவரது பெயரை சொல்லும் புண்ணியம் கிடைக்கும்.

## கார்த்திகை

### கார்த்திகைத் தீபம் (விளக்கீடு)

இது கார்த்திகை மாதத்தில் வரும் கார்த்திகை நட்சத்திரமும் பூரணையும் கூடிய தினமாகும். சிவன் முப்புரங்களை எரித்தது இந்ததினமேயாகும் பிரம்மாவிற்கும் விஷ்ணுவிற்குமாக திருவெண்ணாமலையில் சிவன் சோதிப் பிழம்பாக காட்சியளித்ததும் இந்நாளே. கார்த்திகைப் பெண்களால் வளர்க்கப்பட்டு கார்த்திகேயன் எனப்பெயர் பெற்ற ஆறு முகனுக்கு உகந்த திருக்கார்த்திகை தினத்திலே நம்பிக்கையுடன் உணர்வு பூர்வமான பக்தியுடனும் விரதமிருந்து தீபமேற்றி பூசை வழிபாடு செய்வோருக்கு அக இருள் போய் இக பரசுகம் பேரரசானான பகீரதன் இழந்த நட்டை மீட்டான். திருக்கார்த்திகை தினத்தன்று வீடுகளிலும் தீபங்கள் ஏற்றி கொண்டாடுவர்.

ஆலயங்களில் அமைக்கப்படும் சொக்கப்பானை தீபசோதி சீவராசி, மரம், செடி யாவற்றுக்கும் ஈசனின் அருள் கிடைக்க வழி வகுக்கிறது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விநாயகர் சஷ்டி (பிள்ளையார் கதை)

கார்த்திகை தேய்பிறை பிரதமையில் தொடங்கி மார்கழி வளர்பிறை சஷ்டி ஈறாக அமைந்த இருபத்தியொரு நாட்கள் இந்த விநாயகசஷ்டி எமது வெவ்வினையை வேரறக்க வல்லது. மகாவிஷ்ணுவிற்கு ஏற்பட்ட சாபம் விநாயக வழிபாட்டினால் நீங்கப்பெற்ற தினமாகும். விரத ஆரம்ப நாளன்று இருபத்தொரு இழையினாலான நூல்காப்பை ஆண்கள் வலது கையிலும் பெண்கள் இடது அணிந்து கொள்ள வேண்டும். ஒவ்வொரு நாளும் நீராடி விநாயகருக்குப் பிடித்தமான மோதகம், அவல், கடலை, அப்பம், எள் நிவேதனம் செய்து விநாயகர் அகவல், விநாயகர் சஷ்டி கவசம், பிள்ளையார் கதை என்பன பாராயணம் செய்து விநாயகனை வணங்கி உணவு உட்கொள்ள வேண்டும். இறுதி நாளாகிய சஷ்டி அன்று முழு உபவாசமிருந்து அருகம்புல், எருக்கலம் பூவால் அச்சித்து வணங்கி மறுநாள் காலை விரத நூல்காப்பை சுழற்றிவிட்டு பாரணை பண்ண வேண்டும். இவ்விரதத்தை முறையாக அனுஷ்டிப்பதனால் தடைகள், விக்கினங்கள் நீங்கி சர்வமங்களமும் ஞானமும் மோட்சமும் கிட்டும். மாணவர்கள் கல்வியில் மேன்மைபெறுவர்.

## சோமவாரம்

கார்த்திகை மாதத்தில் வரும் திங்கட்கிழமை சோம வாரம் என சிறப்புப் பெறுகிறது. சந்திரன் சிவபெருமானின் முடியில் அமரும் பேறினை பெற்ற தினமாகும். பகல் பொழுது உணவு உட்கொள்ளாது, மாலை நேரம் சிவனை நினைத்து பூசைசெய்து சிவாலயம் சென்று சிவனை தரிசித்து அதன்பின் உணவு உட்கொள்ள வேண்டும. இவ்விரதத்தினால் பல நற்பலன்கள் கை கூடும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மார்கழி

**'மாதங்களில் நான் மார்கழி'** என்று கிருஷ்ணர் கீதோபதேசத்தில் கூறியதிலிருந்து மார்கழி மாதம் எவ்வளவு சிறப்பானது என்பதை அறியலாம். அத்துடன் மார்கழி மாதம் தேவர்களுக்கு விடியற்காலமாகும். மார்கழி மாதம் முழுவதும் வீடுகளில் கோலமிட்டு பிள்ளையார் பிடித்து வைப்பது தொன்றுதொட்டு வரும் ஒரு வழக்கமாகும்.

### திருவெம்பாவை

திருவாதிரையை கடைசிநாளாகக் கொண்டு அதற்கு 9 தினங்கள் முன்பு ஆரம்பமாகி திருவெம்பாவை நடைபெறும். ஆலயங்களில் அதிகாலையில் பூசைகள் இடம்பெறும். அதிகாலையில் நீராடி திருப்பள்ளி எழுச்சி, திருவெம்பாவைப் பாடல்களைப் படித்து வழிபடுவது சிறப்பாகும். இவ்விரதம் அனுஷ்டிப்பதனால் கன்னிப் பெண்கள் தங்கள் மனம்போல் மணாளனைப் பெறலாம்.

### திருவாதிரை

திருவெம்பாவை இறுதிநாள் திருவாதிரை நாளாகும். இது நடேசர் அபிஷேகம் தினமாகும். நடேசர் அபிஷேகம் அதனைத் தொடர்ந்து ஆரத்திரா தரிசனமும் ஆன்ம ஈடேற்றத் திற்கு வழிவகுக்கிறது.

### வைகுண்ட ஏகாதசி

மாதாமாதம் ஏகாதசி வந்தாலும் மார்கழி மாத ஏகாதசி வைகுண்ட ஏகாதசி என சிறப்புப் பெறுகின்றது. இது சொர்க்க வாயில் ஏகாதசி என்றும் சொல்லப்படுகிறது. அன்றைய தினம் உபவாசம் இருந்து மகாவிஷ்ணுவை வணங்கி துளசித் தீர்த்தம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாத்திரம் அருந்தி விரதம் அனுஷ்டிப்பவர்களுக்கு சொர்க் கவாசல் திறந்திருக்கும் என்பது உறுதி.

### மார்கழி மூலம்

மார்கழி மாதத்தில் வரும் மூல நட்சத்திரம் ஆஞ்சனேய ஜயந்தி தினமாகும். இத்தினத்தில் ஆஞ்சநேயரைப் பூசித்து வழிபடுவ தால் உடல் பலம் ஆரோக்கியம் பெறலாம்.

### தை

இது உத்தராயண கால ஆரம்பமாகும் . அதாவது தேவர் களு க்குப் பகல் பொழுதாகும்.

### தைப்பொங்கல்

தைமாதத்தின் முதல் நாள் தைப்பொங்கலாகக் கொண்டாடப்படுகிறது. இந்த நாள் சூரிய பகவானுக்கு நன்றி செலுத்தும் நாளாக அமைகின்றது. சைவ மக்களின் வாழ்வில் மிக உன்னதமான நாள். மழைபொழிவது சூரியனால் தான் . விவசாயத்திற்கு மழை வேண்டும். விவசாயிகள் ஒரு நாட்டின் முதுகெலும்பானவர்கள். விவசாயி பயிர்செய்வதினால் எமக்கு உணவுகிடைக்கிறது. எனவே இவற்றுக் கெல்லாம். காரணம் சூரியவழிபாடு செய்கின்றோம்.

### தைப்பூசம்

பூரணையுடன் கூடிய பூச நட்சத்திர தினமே தைப்பூசமா கும். இது முருகனுக்குரிய தினமாகும்.

### தை அமாவாசை

அபிராமிப்பட்டரின் பக்தியால் அம்பாளின் அனுக்கிர கத்தால் அமாவாசை பௌர்ணமியாக மாறிய தினம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாசி

### சிவராத்திரி

மாசிமாதத்து தேய்பிறை சதுர்த்தசி கூடிய புண்ணிய தினம் சிவராத்திரி ஆகும். 'சிவசிவ' என்றிட வினை அகன்று சிவகதி கிட்டும். இந்த சிவராத்திரி சிவனுக்குரியது. உயிர்களின் பிறப்பு, இறப்பு என்ற மயக்கமும் அஞ்ஞான உறக்கமும் நீங்கி அவைகளுக்கு மோட்ச சக்தி அருள வேண்டுமென பார்வதி தேவி சிவனை நான்கு ஜாமங்களும் கண்விழித்து வழிபட்ட தினமாக சிவராத்திரி கூறப்படுகிறது. விரதம் அனுஷ்டிப்போர் முழு உபவாசம் இருந்து இரவு கண்விழித்து சிவாலயங்களில் நடைபெறும் நான்கு ஜாமப்பூசைகளையும் தரிசித்து சிவானுக்கிரகம் பெறலாம். இரவு 11 - 30 லிருந்து 1 மணிவரை லிங்கோற்பவ காலமாகும். இந்த காலத்தில் லிங்கோற்ப வரைத் தரிசிப்பதனால் எமது பாவங்கள் நீங்கும். மறுநாள் காலை பாரணை பண்ண வேண்டும்.

### மாசி மகம்

வருணனை அசுரன் பாசத்தால் கட்டி கடலில் போட்ட போது வருணன் சிவனை வணங்கி விமோசனம்பெற்றநாள் மாசி மகம். 12 வருடங்களுக்கு ஒரு முறை வருவதை மஹா மகம், மாமாங்கம் என்பர் பெரியோர்.

## பங்குனி

### பங்குனி உத்தரம்

பங்குனி உத்தரமானது பல சிறப்புக்கள் கொண்ட தினமாகும். இந்தினத்தில் பல தெய்வீகத் திருமணங்கள் நடை பெற்றதால் இது ஒரு மங்களகரமான தினமாகும். மீனாட்சி - சுந்தரேஸ்வரர் திருமணம் நடைபெற்றது இத்தினமே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இத்திருமணக் கோலவடிவமே கலியாண சுந்தர மூர்த்தம் என சொல்லப்படுகிறது. கிருஷ்ண பகவான் - ருக்மணி திருமணம், இராமர் - சீதாபிராட்டி திருமணம் நடந்ததும் இந்தத் தினமே. பங்குனி உத்தர தினமன்று மனச்சுத்தியுடன் கூடிய தூய பக்தியுடன் விரதம் அனுஷ்டித்தால் தடைகள் நீங்கி விவாகம் கைகூடும்.

**பங்குனித்திங்கள்**

இது அம்பாளின் வழிபாட்டிற்குரிய ஒரு தினமாகும். குறிப்பாக கண்ணகை அம்மனை வழிபட வேண்டிய காலம். இந்த நாளில் பொங்கல் வைத்துக், குளிர்த்தியிட்டு வேப்பிலை மாலை சாத்தி வழிபட்டு விரதம் அனுஷ்டித்தால் அம்மை போன்ற நோய்கள் நீங்கி சகவாழ்வுகிட்டும்.

இவை தவிர ஒவ்வொரு மாதத்திலும் வருகின்ற வளர்பிறை சதுர்த்தி விநாயக வழிபாட்டிற்கும், ஒவ்வொரு மாதத்திலும் வருகின்ற கார்த்திகை நட்சத்திரமும் முருகப் பெருமானின் வழிபாட்டிற்கும் சிறந்த காலமாகும். இதைத்தவிர ஒவ்வொரு மாதத்திலும் வருகின்ற வளர்பிறை, தேய்பிறை இரண்டிலும் வருகின்ற திரயோதசி திதியன்று மாலை 4.00 மணி முதல் 6 மணிவரையிலும் உள்ள காலம் பிரதோஷ காலமாகும் தேவர்களும் அசுரர்களும் பாற்க்கடலை கடைந்த போது கொடிய ஆலகால விஷம் தோன்றியது. தேவர்கள் பயந்து சிவபெருமானிடம் ஓடிவந்து அமுதத்தைக் கொடுத்து தேவர்களைக்காத்து அருளிய காலமிதுவாகும். பெருமான் விஷத்தை அருந்தியதால் நீலகண்டன் எனப் பெயர் பெற்றார். பிரதோஷ காலத்தில் விரதம் அனுஷ்டிப்போர், சிவாலயத்தில் தரிசனம் செய்து வழிபட வேண்டும். அப்படி வழிபடும் போது நந்திதேவருடைய இரண்டு கொம்புக்குமிடையில் சிவ தரிசனம் செய்ய வேண்டும்.



S

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதைத் தவிர மாதத்தில் வருகின்ற பூரணை, அமாவாசைத் தினங்களும் விரதத்தினங்களாகும். பூரணை தாயை இழந்தவர்களும் அமாவாசை தந்தையை இழந்தவர் களும் அனுஷ்டிக்க வேண்டும். இதனால் பிதிர் தோஷங்கள் நீங்கும்.

பூரணை தினத்தன்று அம்பாள் ஆலயங்களில் நடைபெறும் திருவிளக்குப் பூசையில் கன்னிப் பெண்களும் சுமங்கலிப் பெண்களும் கலந்து வழிபட்டு விளக்குப் பூசை செய்வதனால் கன்னிப் பெண்களுக்கு மங்கள நிகழ்வுகளும், சுமங்கலி களுக்கு நீண்ட மாங்கல்யப் பலனையும் பெறலாம்.

## ஸ்ரீ வரலட்சுமி விரதம்

இந்த விரதம் ஆடிமாதம் சுக்கிலபட்சத்தில் இரண்டாவது வெள்ளிக் கிழமையன்று அனுஷ்டிக்கப்படுகின்றது. முன்பு பார்வதி அம்மையார் ஸத்புத்திரனை வேண்டி இவ்விரதத்தை அனுஷ்டித்ததனால் விரத மகிமையால் ஸண்முகன் தோன்றி னான். வரலட்சுமியை மகிழ்விக்கக்கூடிய இந்த சம்பத் விரதத்தை அனுஷ்டிக்கும் பெண்கள் வாழ்வில் சகல போகங் களையும் அனுபவித்துப் பின் வைகுந்தம் சேருவாள். இவ்விரதம் அனுஷ்டிக்கும் பெண்கள் ஒன்பது முடிச்சிட்ட சுமங்கலிப் பெண்களுக்கு மஞ்சள், குங்குமம் கொடுத்து அவர்களிடம் ஆசிபெற வேண்டும்.

சைவமக்கள் இத்தினங்களை மனதில் கொண்டு பக்தி பூர்வாக இதய சுத்தியுடன் இறைவன் வழிபட்டு ஆனந்தப் பேரருள் பெறுவார்களாக!

சுபம்

'எங்கும் மங்களம் என்றும் நிறைக'



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குஞ்சித சரணம் கூட்டுக என்றே
ஏத்தி ஏத்தித் தொழுவோம் வாரீர்

இனிய நண்ணீர், இனிய நண்ணீர்,
இன்னே, இணைந்துயாம், ஏத்துவம் வாரீர
சிற்பரன் எங்கள் சிவகாமி நேயன்
சொற்பதங் கடந்த துரிய மூர்த்தி
அற்புத நடனம் ஆடும் கூத்தனை
சிவபூமி என்னத் திகழும் ஈழத்துப்
பவமான அகரப் பண்டொரு சித்தன,
பெருந்தவம் ரிந்த பீடுயர் பதியாம்
சித்தன் கேணியில் சீர்மிக நின்றேன்
சிவசுப்பிர மணிய செம்பல் அவரும்

தப்பில அன்ன லட்சுமி தன்னொடும
ஆற்று தவத்தின் அரும்பயன் அதனால்
தனலட் சுமியைச் சந்திர லேகையை
யோகரத் தினமாம் இவர்தம் உடனாய்
நவரத் தினப்பெர் நம்பியும் போந்தனர்;

நவரத் தினப்பேர் நம்பி இவரும்
செந்தமிழ் ஆங்கிலம் திருந்தக் கற்று,
தொழில்நுட் பக்கல்வி துரிசறப் பயின்று,
சேவடி கிராம உத்தியோ கத்தராய்
நாடு போற்ற நற்பணி இயற்றி

பீடுபெற நின்று பெரிய வளவுறை
கணபதி தாண்மலர் கருத்துடன் ஏத்தி
வல்லவ ராக வளர்ந்து நின்றும்
நல்லோர் தாமும் நம்பி இவரை
இல்லறம் தன்னில் இணைக்கவிழைந்தனர்;
செந்தமிழ் தெந்ரிந்து சித்தாந் தத்துடன்
வேதாந் தமும்தான் விரும்பிப் பயின்று
அரச உத்தியோகம் அடைவுடன் புரிந்து


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாகபத்ம நாத நம்பியார் தாமும்
பரமேஸ் வரிப்பேர் பாவை யுடன்றான்
அரனடி வழுத்தி அன்புடன் வாழ்வுழி
இளங்கோ உடனாய் எய்துநக் கீரன்
ஆதிரை இவருடன் அன்புரு ஆய
மாதர் திலகம் வாசுகி யாரை
தேவன் அருளால் ஈன்று தந்தனரே !

சான்றோர் வேண்டத் தலைவர்நவ ரத்தினம்
வாசுகி மாதரை வதுவை கண்டு
கோகுலன் ராகுலன் பவித்திரா இவரை
ஓசையின ஈன்று ஒழுக்கமும் கல்வியும்
கண்ணெனம் தந்து ஓம்பி நின்று

தெய்வம் தெளிந்து தெளிந்தோர் பேணி
வருவிருந்தோம்பி வாய்மை காத்து
பெரிய வளவுறை பிள்ளை யாரை
உருகிப் பணிந்து தொண்டுபல இயற்றி
வாழ்வாங்கு வாழ்ந்து வருநாள் தன்னில்

பண்டை வினையின் பான்மை கொல்லோ
செய்வினை முற்றிய திறமது கொல்லோ
கல்லா மறலிதன் கடுஞ்சினம் கொல்லோ
பெற்ற பிள்ளைகள் பேதலிப் புறவும்

ஆண்டொரு நாற்பான் ஒன்பஃ. தென்னங்
புன்புலால் யாக்கையைப் பொருக்கென வீசி
சொல்லா தகன்றே போயினன் அவனைக்
குஞ்சித சரணம் சுட்டுக என்றே
ஏத்தி ஏத்தித் தொழுவோம் இனியே

'குடம்பை தனித்தொழியப் புட் பறந்தற்றே
உடம்போ(டு) உயிரிடை நட்பு'

— திருவள்ளுவ தேவர் —



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புண்ணியம் பெற்றவர்

சித்தன் கேணி பெரியவளவு ஸ்ரீமஹா கணபதிப்பிள்ளை யார் கோவில் பரிபாலன சபையின் பொருளாளர் திரு.சி. நவரட்ணம் (G.S) அவர்களுடன் நான் கோயில் பூசகராக பெறுப்பேற்ற காலம் தொடக்கம் நெருங்கிப் பழகும் வாய்ப்பும் கிடைத்தது.

அவர் அன்புள்ளம் கொண்டவர். கடவுள் பக்தி மிக்கவர், நிதானமானவர், நேர்மையுடையவர் தொழிலில் வல்லுநர் , கடின உழைப்பாளி எடுத்த காரியத்தைக் குறித்த நேரத்தில் செய்து முடிக்கும் திறனுடையவர். செய்யும் தொழிலைச் சிறப்புடன் செய்யும் செயல் வீரர்.

குறிப்பாக இவ்வருடம் நடைபெற்ற மகா கும்பாபிஷேக நிகழ்ச்சியிலும் முழுமையாகப் பங்கேற்று அவை சிறப்பாக நடைபெற தன் முழுமையான ஒத்துழைப்பையும் செய்து பெரும் புண்ணியம் பெற்றார்.

பொறுப்புணர்வுடனும் தன் நம்பிக்கையுடனும் சொல்லும் செயலும் ஒன்றான தன்மையுடனும் , கண்டிப்புடனும் நடந்து கொள்பவர்.

மாதப்பிறப்பு, சதுர்த்தி விசேடநாட்களில் அவரையும் அவரது குடும்பத்தாரையும் கோயிலில் நான் சந்திப்பது வழக்கமாகும்.

பிறப்பும் இறப்பும் இயற்கையின் நியதி பிறப்பவர் இறப்பது இப்புவியில் என்றும் உறுதி. இறைவன் படைப்பின் தத்துவம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதுவே. இருப்பினும் இறந்தவர் எம்மவரானால், எம் உற்றார் உறவினரானால் எம் உற்ற நண்பர்களானால் இவ்விழப்பை எம்மனம் ஏற்க மறுக்கிறது.

அன்புக்குரிய நவரட்ணம் அவர்களின் மறைவு அளவில்லாத் துயரைத் தருகிறது. இறந்தோரின் பிரிவு இருப்போரை துன்புறச் செய்கிறது.

காலம் கழியுமுன் காலதேவன் தன் கடமையில் முந்திவிட்டான். கடவுளும் அவ்வேளை கண்ணயர்ந்து விட்டான்போலும். குற்றம் சொல்ல யாருமில்லை கொடுத்தவனே எடுத்துக்கொண்டான். படைத்தவனே பாதியில் பறித்துக்கொண்டான். பக்தி மானைப் பரனே பாலித்துக் கொண்டான் பிறவாமை வேண்டும். மீண்டும் பிறப்புண்டேல். இறைவனடி மறவாமை வேண்டும்.

இவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை இறைஞ்சுவோமாக.

*சாந்தி! சாந்தி!! சாந்தி!!!*

தொண்டு செய்வாருக்கு உண்டே ஞானம்.

தொண்டு செய்வாருக்கு உண்டே மோனம்.

தொண்டு செய்வாருக்கு உண்டே தானம்.

தொண்டு செய்வாருக்கு உண்டே கானம்.

*– சிவயோகசுவாமிகள் –*

பிரம்மஸ்ரீ நாகேந்திர கமலநாத சர்மா
(பிரதமகுரு)
மஹா கணபதி பிள்ளையார் கோவில்,
சித்தன்கேணி.

*Brammasri Nagendra Kamalanatha Sarma*
*Sri Maha Ganapathi Pillayar Temple,*
*Siththankeney.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அருட்கவி சீ. விநாசித்தம்பி அவர்களின் கந்தபுராண உரை நூல் வெளியீட்டின் போது சி. நவரட்ணம் அவர்கள் அருட்கவியைப் பாராட்டி மலர்மாலை அணிவிக்கின்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மக்கள் சேவையில் மகிழ்வு கண்டவர்

சிவனடியாரும், சமூகசேவையாளருமான அமரர் சி. நவரத்தினம் அவர்களின் மறைவு அனைவரையும் துயரத்தில் ஆழ்த்தியுள்ளது. ஆன்மிகத்தின் செழிப்பில் கிராமத்தின் வளர்ச்சியை கண்டவர்.

ஆன்மிகம் மிக்க வாழ்வும், சமூகசேவையுமே இவரை ஏனையவர்களிடமிருந்து முதன் நிலைப்படுத்தியது.

தான் மாத்திரம் வாழவேண்டும் என்று எண்ணாது தான் சார்ந்த மக்களும் நலமுற வாழவேண்டும் என நினைப்பவர்.

தனது எண்ணத்திற்கு அமைய மக்கள் சேவையை நிறைவாக செய்ய கிராமஉத்தியோகத்தராகவும், தனது ஆன்மிக வாழ்வை பெருக்க ஸ்ரீமகாகணபதிப்பிள்ளையார் ஆலய பரிபாலன சபை தனாதிகாரியாகவும் இருந்து பல நற்செயல்களை ஆற்றி வந்தார்.

சமூகம் தன்னை நன்றாக பயன்படுத்திக் கொள்ள தன் வாழ்வை முழுமையாக சேவைக்கும், ஆன்மீகத்திற்குமாக ஈடுபடுத்தி வந்த வேளையில் தீடிரென அமரராகியமை பேரிழப்பாகும்.

அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினர் மனம் ஆறுதல் அடையவும், அமரரின் ஆன்மா சாந்தியடையவும் மனங்கொண்டு தனுவோடைபதிஸ்ரீசிவகாமி அம்பாள் சமேத சிவசிதம்பரேஸ்வரப்பெருமானைப் பிராாத்திக்கின்றோம்.

ஓம் சாந்தி

பிரம்மஸ்ரீ ஞா.சபாரட்ண சர்மா
(பிரதமகுரு)
சிவன் கோவில்.

சித்தன்கேணி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மனச்சாட்சிப்படி வாழ்ந்த பெரியார்

மரணம் என்பது இயற்கை. ஆனால் அது சொல்லாமல் கொள்ளாமல் திடீரென வந்து பிரியமானவர்களை கொண்டு செல்லும்போது அது தாங்கொணாத் துயரத்தைத் தருகின்றது.

இரண்டு வாரங்களுக்கு முன்பு அலுவலகத்தில் நான் மிகவும் வேலைப்பழுவில் மூழ்கியிருக்கும்போது சங்கானை யைச் சேர்ந்த கிராமசேவை அலுவலர் திரு தில்லை நடராஜா திடிரென வந்து நவரத்தினம் விதானையார் நேற்று அமரத்துவமடைந் துவிட்டார் என சொன்னபொழுது எனக்கு ஒன்றும் செய்யத் தோன்றவில்லை.

எந்தவொரு வேலையையுமே தொடர்ந்து செய்யமுடி யாமல் போய்விட்டது. அவ்வளவு தூரத்திற்கு அவரை நான் நேசித்தேன்.

அவருடைய நேர்மை, துணிச்சல், வெளிப்படையாகக் கதைக்கும் பண்பு ஆகிய அம்சங்கள் என்னைப் பெரிதும் கவர்ந் தன.

சமீப காலத்தில்தான் அவரது மாமனாராகவிருந்த நாகபத்மநாதன் மறைந்து போனதையறிந்து அவரது வீட்டிற்குச் சென்றிருந்தேன்.

மாமனாரைத் தொடர்ந்து மருமகன் இந்த உலகத்தை விட்டு விரைவில் மறைந்துவிடுவாரென யாரும் கனவு கண்டிருக்க முடியாது.

அமரர் நவரத்தினம் நிறைந்த தமிழ் பற்றுள்ளவர். சித்தன்கேணியில் கோயில்கொண்டு எழுந்தருளியிருக்கும் விநாயகர் மேல் முறையான பக்தி கொண்டவர். அந்தக்கோயில் காரியங்களை தனது வீட்டுக் காரியங்கள் மாதிரி வெகு சிரத்தையுயோடு செய்து வந்ததை நான் அறிவேன். தனது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடமையில் யாரும் அநாவசியமாகத் தலையிடுவதை விரும்பாதவர்.

நான் உனது கடமையைச் சரியாகச் செய்து வருகிறேன். மனச்சாட்சிதான் எனது வழிகாட்டி. நான் ஏன் மற்றவர்களுக்குப் பயப்பட வேண்டும் என்று கூறுவார். அவர் அதைக் கூறுவதில் அர்த்தங்கள் நிறைய இருக்கத்தான் செய்கின்றன.

நான் சங்கானையில் கடமையாற்றிய பொழுது என்றுமே நவரத்தினத்துடன் பிரச்சினைப்பட்டது கிடையாது.

அதிகாரி மனம்கோணாதபடி எப்பொழுதும் கடமை யாற்றுவார். தனது நண்பர்களை மீறி என்றுமே ஒன்றும் செய்ய மாட்டார். இத்தகைய ஒரு நல்ல அரச ஊழியரை இழந்தது நாம் செய்த துரதிஷ்டமே. அவருடைய மனைவி, பிள்ளைகளும் ஒரு அருமையான மனிதரை இழந்து அல்லல்படுகிறார்கள் அவருடைய துயரத்திலே நான் பெரிதும் பங்குகொள்கின்றேன். எங்களுடைய ஆறுதல் வார்த்தைகள் அவர்களுடைய துயரை என்றுமே போக்கிவிட முடியாது. காலம்தான் நல்ல பதிலைத் தரவேண்டும். எங்கள் நண்பன் நவரத்தினத்தின் ஆத்மா சாந்தியடைய நான் இறைவனை மனமாரப் பிரார்த்திக் கின்றேன்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம்சாந்தி!!!

து.வைத்திலிங்கம்

யாழ். மாவட்டம். மேலதிக அரச அதிபர்,

'வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப்படும்'

– குறள் –



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## செயல் வீரன்

அமரர் சிவசுப்பிரமணியம் நவரட்ணம் அவர்களின் இழப்பு ஈடு செய்ய முடியாத பேரிழப்பாகும். அமரர் நவம் அவர்கள் சிறந்த செயல் வீரன்.

மனதிலே பட்டதை அப்படியே சொல்லுவார். அகம் ஒன்று வைத்து புறம் ஒன்று கதைப்பத என்பது அவருடைய அகராதியில் கிடையாது.

செய்யமுடியாததை வெளிப்படையாகவே செய்ய முடியாது என்று கூறும் பண்பினையுடையவராக விளங்கினார். எவருக்கும் உதவி செய்கின்ற தன்மையையும் மற்றவர்களை மதிக்கின்ற பண்பையும் கொண்ட ஒரு உத்தமராகத் திகழ்ந்தார்.

தனக்கு சரியென்று பட்டதை வெற்றிகரமாகச் செய்து முடிக்கின்ற ஆற்றலுடையவராகவும் அச்செயலுக்கு எத்தனை இடர்கள், பயமுறுத்தல்கள் வந்தபோதம் அதில் நின்று பின்வாங்காது துணிவுடன் செய்து முடித்தவர்.

தான் கடமையாற்றும் பிரிவிலுள்ள மக்களை எப்போதும் அணுகக்கூடியவராகவும், அவர்களுக்கு தன்னாலியன்ற உதவிகளை செய்து கொடுத்தார்.

தன்னுடைய தொழிலுடன் மட்டும் நின்றுவிடாதுபல்வேறு பொது நிறுவனங்களிலும் தன்னை இணைத்து சமூக சேவையாளராகத் திகழ்ந்தார்.

தான் வகித்த கிராம உத்தியோகத்தர் பதவியை பொதுமக்கள், அரச உத்தியோகத்தர்கள் போற்றும் வண்ணம் கடமை செய்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிராம எத்தியோகத்தர்களுக்கெல்லாம் முன்மாதிரியாகத் திகழ்ந்தது மட்டுமல்ல சிறந்த வழிகாட்டியாகவும் வாழ்ந்தார்.

நேர்மையான உத்தியோகத்தராக கடமை செய்தார். பிறர் எந்தவொரு குற்றமும் காணாதபடி மிகத்திறமையாக சேவையாற்றினார்.

அன்னாரின் சேவை என்றுமே மக்கள் மனதில் நிலைத்திருக்கும். அன்னாரின் இழப்பு மிகவும் தாங்கமுடியாத பேரிழப்பாகும்.

அன்னாரின் மறைவால் துயருறும் குடும்பத்தினர் துயரில் பங்கு கொள்வதுடன் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த ஆனுதாபங்களைத் தெரிவிக்கின்றோம்.

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகின்றோம்.

நா. வேதநாயகம்
சண்டிலிப்பாய். பிரதேச செயலர்,

நாம் கடவுளை உள்ளத்தில் வளர்க்கிறோம்
நாம் அவருடைய தாய்.
நமக்கு மவருக்குமொரு குறைவுமில்லை
நம்மை அவர் பிரிய முடியாது.
முழுதும் உண்மை
ஓம் சாந்தி ! சாந்தி !! சாந்தி!!!

நற்சிந்தனை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பண்பின் உறைவிடம்

சித்தன்கேணியில் ஊற்றெடுத்து ஒரு தலைசிறந்த பண்பாளனை நாம் அனைவருமே இழந்து விட்டோம். தனக்கே உரிய பாணியில் தனது மனதில் சரியெனப் பட்டதை பேச்சாலும், செயலாலும் நிறைவேற்றி மன நிறைவோடு சேவை செய்த ஒரு மிகச் சிறந்த சேவையாளர்.

எமது கட்சிக்கு சோதனைகள் ஏற்பட்ட போதெல்லாம் எம்மோடு துணைநின்று எமக்கு பக்கபலமாய் செயற்பட்டு உழைத்த ஒரு துணிச்சல்காரன் மட்டுமல்ல,

எனது இனிய நண்பனுங்கூட.தன்னுடைய பண்பான நடத்தையாலும், நேர்மையான செயற்பாடுகளாலும் அனவரி னதும். உள்ளத்தை கவாந்தவர்.

இவரின் செயற்பாட்டையும், இவரையும் எதிரிகள் கூட விரும்புவார்கள். அந்தளவிற்கு நீதியுடனும், நேர்மையுடனும் செயற்பட்ட தனக்கென வாழாது சமூக சிந்தனையோடு வாழந்தவர்.அவரின் இழப்பு நிரப்ப முடியாத வெற்றிடமே.

இத்தகைய ஒரு உத்தமரின் பிரிவை எம்மால் தாங்க முடியவில்லையெனின், அவருடன் வாழ்ந்த அவர் மனைவி, மக்கள், ஈன்றெடுத்த தாய், உடன் பிறப்புகள் மற்றும் உறவினர் களுக்கும் எத்தகைய ஆறுதலை கூறமுடியும். காலம் தான் அவர்களை தேற்ற முடியும்.

அன்னார் செய்த அளப்பரிய சேவைகளை அவர் ஆத்ம சாந்திக்கு துணை நிற்கும் என்றாலும், நாமும் அவர் ஆத்ம சாந்திக்கு எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திப்போமாக.

வீ. ஆனந்தசங்கரி

யாழ்ப்பாணம்.

பா.உ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நேர்மையுள்ள இலட்சியப் பற்றாளன்

தன்னம்பிக்கை கொண்ட இலட்சியவாதியும் கிராம சேவையாளருமாகிய திரு.சிவசுப்பிரமணியம் நவரத்தினம் அவர்களின் மரணச்செய்திகேட்டு பேரதிர்ச்சியடைந்தேன்.

தமிழர் உரிமையுடன் வாழ வேண்டும் என்ற சுதந்திர வேட்கை கொண்ட தமிழ்ப்புரட்சியின் ஆரம்பகால உறுப்பினரும் தந்தை செல்வாவின் கொள்கையில் ஆசையா நம்பிக்கை கொண்டவருமான காலஞ்சென்ற திரு. நாக பத்மநாதனுக்கு மருமகனாக, மணவாழ்க்கையில் இணைந்து கொண்ட இவர்,

தனது மாமனாரின் கொள்கைக்கு உரமாக நேர்மையுள்ள தன்னலமற்ற கிராம சேவையாளனாக சமூக சேவையாளனாக - இறைபணிக்காகத் தன்னை அர்ப்பணித்த சமயத் தொண்டனாக சமூக சீர்திருத்தவாதியாக விளங்கிய மனிதருள் மாணிக்கம்.

இவ்வளவு விரைவில் இவர் எம்மை விட்டுச் சென்றுவிடுவார் என சிறிதும் கூட எண்ணிப்பார்க்க முடியவில்லை.

சித்தன்கேணி மண்ணின் இலட்சியப் பற்றுக்கோர் ஒளி விளக்கு அணைந்து விட்டது.

தமது கொள்கைப் பற்றில் எத்தனை இடுக்கண் வரினும் இம்மியளவும் வழுவாது இறுதிவரை தமிழர்களின் உரிமைக்காக குரல் கொடுத்து - அகிம்சை வழியில் போராட்டம் பல நடத்திய ஈழத்துக்காந்தி தந்தை செல்வாவின் அதே கொள்கையில் இலட்சியப்பாதையில் தமிழர்விடுதலைக் கூட்டணியின் வளர்ச்சியிலும் வெற்றியிலும் துணிச்சலுடன் முழுமூச்சாக நின்று பணியாற்றிய பெருமை அமரர் நவரத்தினம் அவர்களுக்குண்டு.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடந்த ஒரு தசாப்தமாக இடம்பெற்ற யுத்தசூழலில் பல வழிகளிலும் அச்சுறுத்தல்கள் விடுக்கப்பட்ட போதிலும், தனது கொள்கை இலட்சியங்களில் இருந்து விலகாது அற்ப சொற்ப சலுகை அரசியலுக்கு அடிபணியாது, தனது உயிரைத் துச்சமென மதித்து நின்றவர் உயர்ந்த பண்பாளன் திரு நவரத்தினம் என்பதை யாரும் மறுக்கமுடியாது மறக்கவும் முடியாது.

அதே வேளை சமூகப்பணிக்கேற்ற கிராம சேவையாளர் என்ற அரச பதவியை ஏற்றிருந்த இவர் கடமையே கண்ணாகக் கொண்டு, நேர்மையாக - நிதானமாகத் தனக்களிக்கப்பட்ட கடமைகளைச் செவ்வனே உரிய நேரத்தில் செய்து முடித்து, மக்கள் சேவைக்கோர் கடமை வீரனாகத் திகழ்ந்து, எல்லோரிடமும் பெருமதிப்புபெற்றிருந்தார்.

நீண்டகால இடைவெளிக்குப் பின் காலஞ் சென்ற அமரர் நாகபத்மநாதனின் மறைவுக்குச் சென்று அவருடனும், மனைவி பிள்ளைகளுடனும் அவரின் உறவினர்களுடனும் கலந்துரையாடும் சந்தர்ப்பம் எனக்குக்கிட்டியது. அவ்வேளை அவரது உறிவினரான இளம் தலைமுறையினரும் அங்கு கூடியிருந்து ஆரம்ப கால அரசியல் போராட்ட வரலாறுகளைக் கேட்டறிவதில் பெரும் ஆர்வம் காட்டினர்.

அந்நாளில் நிகழ்ந்த கலந்துரையாடலில் திரு.நவரத் தினம் அவர்களுக்கு ஏற்பட்ட மகிழ்ச்சி ஆரவாரத்தையும் அவரது மனைவி, பிள்ளைகள், உறவினர்களின் அன்பு, பாசமிகு உணர்வுகளையும் இன்று நான் எண்ணிப் பார்க்கின்றேன். அதை என்னால் இன்னும் மறக்க முடியவில்லை.

திரு. நவரத்தினம் அவர்களுக்கு ஏற்பட்டகடந்த கால அரசியல் பயங்கர கசப்பான அனுபவங்கள் உயிரைத்துச்ச மென மதித்து பாதிக்கப்பட்ட கிராம மக்களுக்கு அவர் ஆற்றிய சேவைகள் என்பன பற்றி அவர் வாயிலாகக் கேட்டறிந்தேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவற்றையெல்லாம் என்னிடம் கூறி அவர் ஆறுதலடைந்ததையும் நான் உணர்ந்து கொண்டேன்.

மீண்டும் நான் சந்தர்ப்பமேற்படும் போது அவரையும் குடும்பத்தினரையும் வந்து சந்தித்து உரையாடுவதாகக் கூறி அவர்களிடம் விடைபெற்றுச் சென்றேன்.

ஆனால் நான் மீண்டும் அவரை மீளாத் துயில் கொள்ளும் இந்த மிகவும் துயரம் நிறைந்த துர்ப்பாக்கிய நிலையில் அவரது மரணச்சடங்கில் பங்குகொள்கின்றேன். திரு. நவரத்தினம் அவர்கள் இவ்வளவு குறுகிய வயதில் எம்மிடமிருந்து விடைபெற்றுச் சென்றுவிட்டார் என்பதுதான் மிகவும் வேதனைக்குரியது.

இவரது மாமானார் காலஞ்சென்ற அமரர் நாகபத்மநாதன் அவர்களை இழந்து, இக்குறுகிய காலத்தில் திரு. நவரத்தினம் அவர்களின் மறைவு தொடர்சேவை நிகழ்வாக - ஈடுசெய்ய முடியாத இழப்பாக எதிர்நோக்கியுள்ள அவரது மனைவி, பிள்ளைகள் மட்டுமல்ல, சித்தன்கேணி கிராம மக்களுடன் தமிழ்ச்சமூகமே கதறியழும்காட்சி அமரர் திரு. நவரத்தினம் அவர்கள் தனது மனிதப்பிறவியில் எவ்வளவுதூரம் கொள்கை - இலட்சியப்பற்று - நேர்மை - நம்பிக்கை, துணிச்சல் இவற்றுடன் கூடிய சமூகசேவையை மக்களுக்கு ஆற்றியுள்ளார் என்பதை உணர்த்தி நிற்கின்றது எனலாம்.

கடமை, கண்ணியம், கட்டுப்பாடுடன் இலட்சியத்திற்கு இலக்கணமாய்த் திகழ்ந்து இன்று "வானுறை தெய்வத்துள் வைக்கப்பட்ட அமரர் அவர்களின் பேரிழப்பால் துயருறும் அவரது துணைவியார், பிள்ளைகள், உற்றார், உறவினர், சித்தங்கேணி கிராம மக்கள் அனைவருக்கும் எனது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

யாழ்ப்பாணம். மாவை சோ. சேனாதிராஜா

பா.உ.,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சோர்வறியாத் தொண்டன்

அண்மையில் சடுதியாக மறைந்து போன எனத ஆத்ம நண்பன் நவரத்தினம் அவர்களது மறைவு எனக்கொரு தாங்கொணாத துயரத்தைதந்தது.

ஒரு கிராம சேவையாளராக சித்தன்கேணியில் வாழ்ந்து வந்த இவர் தன்னலமற்ற தனது சேவைக் காலத்திலே சிறந் தோங்கி நின்றார்.

சொற்ப காலத்திற்கு முன்பு இவரது மாமனாராகிய அமரர் நாகபத்மநாதன் இங்கிலாந்தில் காலமானார்.

அவர் ஆரம்பகால தமிழரசுக் கட்சியின் முக்கிய உறுப்பினராக தமிழ் மொழியில் கொண்ட பற்றினிலேபல இன்னல்கள் அனுபவித்தார்.

அவரது தமிழ்மொழிப் பற்று நாங்கள் நினைக்க முடியாத தொன்றாகும்.

அவரது வழியில்தான் மருமகன் திரு. நவரத்தினம் முத்தியடைந்தார்.

கடந்த காலத்தில் எங்கள் கட்சிக்காக அவர் புரிந்த உதவிகள் பற்பல.

எந்நேரம் போனாலும் எந்தவொரு சலிப்புமில்லாமல் நான் சென்ற இடமெல்லாம் என்னுடன் கூடவந்து தோளோடு தோள் நின்று பாடுபட்டவர்.

உண்மையில் எனது வெற்றிக்கு அவரது பங்களிப்பு மிகமிக முக்கியமானது. இவருக்கு இருதய நோய் இருக் கின்றது என்று எனக்குத் தெரியாது. இந்நோயின் உபாதை யைக்கூட மூடி மறைத்து சதா சிரித்த முகத்துடன் திகழ்ந்தவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மையில் ஒரு அரச ஊழியனாக, ஒரு மக்கள் தொண்டனாக, ஒரு தமிழ்நேசம் கொண்டவனாக இருநதவரை இந்நாடு இழந்துவிட்டது.

அவரது மறைவை ஒருவராலும் தாங்க முடியாது. அவரது மறைவினாலே அல்லற்படும் அவரது மனைவி, பிள்ளைகள், உறவினர் அனைவருக்கும் எனது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு, திரு. நவரத்தினததின் ஆத்மா இறைவனடி சேர்ந்து சாந்தி பெற நான் இதய பூர்வமாக பிரார்த்திக்கின்றேன்.

ந. ந.ரவிராஜ், பா.உ.,

யாழ்ப்பாணம்.

## குருநாதன் அருள் வாசகம்

### ஒரு குறைவுமில்லை

நமது உயிருக்குயிராய் இருப்பவர் கடவுளே.
ஆகையால் நாம் அவருடைய உடைமை.
அவருடைய அடிமை.
நம்முடைய அசைவெல்லாம் அவருடைய அசைவே.
நாம் அவரை ஒரு போதும் மறந்திருக்க முடியாது.

நமக்கு ஒரு குறைவமில்லை
நாம் என்றும் முள்ளோம்
எங்கு மிருக்கின்றோம்.
எல்லாம் மறிவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7

## நேர்மையின் சிகரம்

அன்பு, சாந்தம், அரவணைப்பு, அமைதியாகக் கேட்டும உதவிகளைகூட சினக்காது செய்யும் பண்பு, நேர்மை இவற்றிற்கெல்லாம் உறைவிடம் தான் ஐயா சிவசுப்பிரமணியம் நவரத்தினம் அவர்கள்.

தனக்கென என்றும் வாழ விரும்பாத சேவையின் சிகர மான ஐயா அவர்களின் வாழ்வு மரணத்தால் மறைந்து விடக் கூடிய ஒன்றல்ல. அன்னாரின் அமரத்துவம் என்றும் நெஞ்சில் நிழலாடும்.

சித்தங்கேணியில் ஒரு மனிதம் நிறைந்த சேவையாள னின் மறைவு என்றும் நிரப்ப முடியாத வெற்றிடமே.

எமக்கும், எமது கட்சிக்கும் அவரது மறைவு பேரிழப் பாகும். ஐயாவின் மறைவால் துயருறும் குடும்பத்துடனும், உறவினர்களுடனும் நாமும் பங்குகொள்கின்றோம்.

அன்னாரின் ஆத்மா சாந்தி அடைய ஐயா அவர்களின் நல்லியல்புகள் துணையாகும்.

நன்றி

ச. அரவிந்தன்.

யாழ்ப்பாணம்.

"அன்பிலார் எல்லாம் தமக்குரியர் அன்புடையர்
என்பும் உரியர் பிறர்க்கு"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




சித்தன்கேணி மாதர் சங்க ஆண்டு விளையாட்டுப் போட்டியின் போது
சி. நவரட்ணம் அவர்கள் கொடியேற்றி வைக்கின்றார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கடமை உணர்வு மிக்கவர்

கிராம சேவை உத்தியோகத்தர் திரு. நவரத்தினம் அவர்களின் திடீர் மறைவு கேட்டு அதிர்ச்சியும் ஆழ்ந்த கவலையும் அடைந்தேன்.

அவர் இவ்வளவு சீக்கிரம் எம்மைவிட்டு பிரிவார் என நாம் ஒருவரும் நினைக்கவில்லை.

அவரை நான் நீண்ட நாட்களாக அறிவேன்

அவருடைய மாமன் மனைவியின் தகப்பனார் திரு நாகபத்மநாதன் எனது நீண்டநாள் நண்பன் .

திரு. நவரத்தினம் வாசுகி அவர்களின் திருமணவீட்டில் அமரர் அவர்களை நான் முதலில் சந்தித்தேன்.

அதன் பின் பலசந்தர்பப்ங்களில் அவருடன் பழகும் வாய்ப்பு கிடைத்தது.

நான் சங்கானை பிரதேச செயலராக கடமையேற்ற நாள் தொடக்கம் மிகவும் நெருக்கமாக பழகும் வாய்ப்பும் ஏற்பட்டது.

நல்ல நேர்மையான கண்ணியமான ஒரு அரச அதிகாரியாக நான் அவரைக் கண்டேன் .

பல வேலைத்திட்டங்களை நிறைவேற்றுவதற்கு அமரர் என்னுடன் தோளோடு தோள் நின்று உழைத்தவர்.

இடப் பெயர்வின் போது, அம்மக்களுக்கு தேவையான உதவிகளைச் செய்து கொடுத்ததையும் சித்தன்கேணி பிள்ளையார் கோவிலில் தங்கியிருந்த அகதிகளுக்கு சமைத்த உணவு வழங்கியதையும் நான் அறிவேன் அதற்கான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொடுப்பனவு அவருக்கு வழங்கப்பட வில்லை. அச்செலவை ஆலயம் பொறுப்பெடுத்துக் கொடுத்தது.

நாங்கள் கலாசார பேரவை மூலம் நடத்திய பல இசை விழாக்கள் சிறப்பாகவும் விமரிசையாகவும் நடைபெற முன்னின்று உழைத்த பெருமை அவருக்குரியது.

அன்னாரின் சிறப்பான பணிகள் எமது பணிகளுக்கும் பெருமை சேர்த்தது என்றாலும் மிகையாகாது.

இப்படியான நற்பண்புகள், கடமை உணர்வுமிக்க சமயப் பற்றாளனாகவும், திகழ்ந்த ஒருவர் எம்மைவிட்டு பிரியும் பொழுது எங்கள் இதயம் கலங்குகிறது.

அவர் சித்தன்கேணி பிள்ளையார் ஆலய நிர்வாகத்தில் இருந்து ஆற்றிய பணி எவராலும் மறக்கமுடியாத பணியாகும்.

இவ்வாலயம் புதுப்பொலிவுபெற்று அழகாகக் காட்சி தருவதற்கு அவரின் தொண்டு முக்கியமாக அமைந்துள்ளது.

அவரின் ஆத்மா இறைவனடி சேரும் என்ற நம்பிக்கை எமக்குண்டு. அன்னாரின் ஆத்மசாந்திக்கு எல்லோரும் பிரார்த்திப்போமாக.

கா.சந்திரராசா
இளைப்பாறிய பிரதேச செயலர்,

சங்கானை.

ஆண்டவனை யன்றி வேறொரு பொருளுமில்லை. அனைத்தும் அவன் செயல். உனது சுமைமுழுவதையுந் திருவடிக்கீழ் இறக்கி வைத்து இளைப்பாறு. கவலைக்கிடங்கொடாதே. நான் செய்தேன், அவன்செய்தானானென்று நலியாதே. விழித்திரு.

— நற்சிந்தனை —



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சமயத்திலும் சமுதாயத்திலும் பற்றுள்ள உத்தமர்

சித்தன்கேணிக் கிராம உத்தியோகத்தராயிருந்த அமரர் திரு. சிவசுப்பிரமணியம் நவரத்தினம் அவர்கள் எமது இனத்திலும், கிராமத்திலும், சமயத்திலும் மிகுந்த பற்றுடையவராகத் தன் இளமைக்காலம் தொட்டே திகழ்ந்தார்.

இனத்தின் மீது கொண்டபற்றினால் அவர் இனவிடுதலைக்காக உழைத்த கட்சிக்காகத் தன்னால் ஆனமட்டும் பாடுபட்டார்.

கிராமத்தின்மீது கொண்டபற்றினால் இளைஞர் முன்னேற்றக் கழகம், சனசமூக நிலையம் ஆகியவற்றின் உறுப்பினராக இணைந்து பாடுபட்டார்.

சமயத்தின்மீது கொண்ட பற்றினால் அவர் எமது கிராமத்து ஆலயங்களின் வளர்ச்சியில், குறிப்பாகச் சித்தன்கேணி பெரிய வளவு ஸ்ரீமகா கணபதிப்பிள்ளையார் கோவிலின் வளர்ச்சியில் மிகுந்த அக்கறையும் ஈடுபாடும் கொண்டு அதற்காகத் தனது நேரத்தில் பெரும்பகுதியை ஒதுக்கினார்.

கடந்த 15வருடங்களுக்கு மேலாக இந்த ஆலயத்தின் பரிபாலன சபையில் அங்கத்தவராக இருந்து கடந்த 10வருடங்களாகப் பரிபாலனசபையின் பொருளாளராக இருந்து மிகுந்த ஈடுபாட்டுடன் ஆலயத்தின் வளர்ச்சியில் பங்காற்றினார்.

கடந்த வருடத்தில் பாலஸ்தாபனம் செய்து பாரிய திருப்பணிவேலைகள் செய்து சிறப்பாக இவ்வாண்டு கும்பாபிஷேகம் செய்வதற்கு இவர் தன்னால் இயன்றவரை அர்ப்பணிப்போடு கடுமையாகப் பாடுபட்டார்.

இவ்வாறு இவர் செய்வதற்கு இவருடைய உத்தியோகமும் உதவியாக இருந்தது. இவர் மகா கணபதிப் பிள்ளையாருக்கு ஒரு முழுநேர ஊழியனாகப் பணிபுரிந்தார் என்று கூறினால் மிகையாகாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆலய முன்னேற்றத்துக்காக யார் யாரைச் சந்தித்து எந்த விதமான உதவிகளைப் பெறலாம், என்னென்ன முன்னேற்றமான வேலைகளைச் செய்யலாம் என்பது பற்றியே எப்போதும் சிந்திப பவராக இருந்தார்.

இவருடைய இந்தப் பணிகளினால் மகிழ்ந்து இவரை எல்லாம்வல்ல மகா கணபதிப் பிள்ளையார் தனது சேவைக்கே அழைத்துச் சென்றுவிட்டார் போலும்.

இவருடைய பிரிவினால் மிகுந்த கவலையுற்று இருக்கும் இவருடைய அன்புத் தாயார், மனைவி, பிள்ளைகள், சகோதரர்கள், மற்றும் உறவினர் யாவர்க்கும் மனச்சாந்தியையும் இவருக்கு ஆத்ம சாந்தியையும் அருளுமாறு எல்லாம்வல்ல ஸ்ரீமகா கணபதிப் பிள்ளையாரைப் பிரார்த்திக்கின்றேன்.

ஸ்ரீ மகாகணபதிப் பிள்ளையார் கோவில்,
சித்தன்கேணி.

மு.பத்மநாதன
தலைவர்,
பரிபாலனசபை.

**நான் யார்**

நீ உடம்பன்று, மனமன்று , புத்தியன்று, சித்தமன்று, நீ ஆத்மா.

ஆத்மா ஒரு நாளும் அழியாது. இது மகான்களுடைய அநுபவ சித்தாந்தம். இந்த உண்மை உனது உள்ளத்தில் நன்றாய்ப் பதியக் கடவது.

ஆனால் நீ கவனிக்க வேண்டியது ஒன்றுண்டு, அதாவது தருமநெறியிற் பிசகாதே. எவ்வுயிரும் பெருமான் திருமுன்னிலை என்று சாதனை செய். கடவுள் உள்ளும் புறம்பும் உள்ளவர்.

இப்படிக்கு
அவனே நானே

- நற்சிந்தனை -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சித்தன்கேணி கணேச வித்தியாசாலையில் நடைபெற்ற விழாவொன்றின் பொழுது மங்கள விளக்கேற்றி வைக்கின்றார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கருமமே கண்ணாயினார்

ஒரு காரியத்தைச் சிந்தித்து அதனால் வரும் நன்மைகள், தீமைகள் கிடைக்கும் பலன் என்பவற்றை ஆராய்ந்து செய்தால் எதிர்பார்த்த நன்மையே கிடைக்கும் என்ற தத்துவத்தை வள்ளுவப் பெருமகன்,

"அழிவதூஉம் ஆவதூஉம் ஆகிவழி பயக்கும்
ஊதியமும் சூழ்ந்து செயல்"

என்ற குறள் மூலம் தெளிவாக எடுத்தியம்பியுள்ளார். இப் பொய்யாமொழிக்கமைய தனது இறைபணியைச் செய்தவர் அமரர் திரு. சி. நவரத்தினம் ஆவார்.

தனது பணியை, அது எத்துணை நுண்ணிய கருமமாக இருந்தாலும் அவர் எண்ணித் துணிவதில் தவறுவதில்லை.

சித்தன்கேணி மகா கணபதிப் பிள்ளையார் ஆலயத்தின் பரிபாலன சபைப் பொருளாளராக இருந்து அவர் ஆற்றிய திருப்பணி ஆலய வரலாற்றில் ஒரு மைல்கல்.

அவனருளாலே அவன்தாள் வணங்கப்படும் பேறு பெற்ற அன்னார் இன்று விநாயகப் பெருமானின் பேரானந்த ஜோதியிலே கலந்து விட்டமையும் எம்பெருமானின் விருப்பன்றோ என்று நினைந்து மனச்சாந்தி கொள்வோமாக.

"துணைநலம் ஆக்கம் தரூஉம் வினைநலம்
வேண்டிய எல்லாம் தரும்"

"மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெலாம்"

சித்தன்கேணி.

பரிபாலனசபையினர்.
ஸ்ரீ சிவ சிதம்பரேஸ்வரர் ஆலயம்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்த விதானையார்

அமரர் சிவசுப்பிரமணியம் நவரத்தினம் - கிராம அலுவலர் - அவர்கள் காலமானார் என்ற செய்திகேட்டு மிகுந்த கவலையும் அதிர்ச்சியும் அடைந்தவர்களுள் நானும் ஒருவன்.

கிராம அலுவலர்களிடமிருக்க வேண்டிய சேவை, நீதி, நேர்மை, அன்பு, பொறுமை, தேசத்தொண்டு ஆகிய குணங்கள் இவரிடம் ஒருங்கே காணப்பட்டது.

''மங்கலம் என்ப மனைமாட்சி மற்றதன்
நன்கலம் நன்மக்கட் பேறு''

என்ற பொய்யா மொழிக்கமைய நல்ல ஆசிரியையாகக் கடைமையாற்றும் வாசுகியை வாழ்க்கைத் துணையாகப் பெற்று நன்கலமாகிய நன்மக்கட்பேறாகிய மூன்று செல்வங்களை இவ்வுலகுக்கு அளித்தவர்.

இவரது சேவை நீண்டகாலம் சித்தன்கேணிக் கிராமத்துக்குக் கிடைக்காததையிட்டு மிகவும் மனவருத்தம் அடைகின்றேன். சமூகத்துக்கு கண்ணாகச் சேவை செய்த இவரை காலன் எம்மிடம் இருந்து பிரித்துக் கொண்டார். நல்லவர்களது சேவை நாட்டுக்கு கிடைப்பதில்லை என்பது இவரது சடுதியான மரணம் ஓர் நல்ல உதாரணமாகும்.

''நெடுநல் உளன் ஒருவன் இன்றில்லை என்னும்
பெருமை உடைத்து இவ்வுலகு''

நேற்று இருந்தவர் இன்றில்லை என்ற பொய்யாமொழிக்கு இதனை ஒப்பிடலாம். வளர்ந்து வருகின்ற அவரது பிள்ளைகட்கும் நாட்டுக்கும் கண்ணாகச் சேவையாற்றும் இந்த வேளையில் நம்மை விட்டு காலன் அவரைப் பிரித்துச் சென்றுவிட்டான். இதனை நாங்கள் ஈடுசெய்யமுடியாது. யாவரும் அறிந்த உண்மை. இவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

சுழிபுரம்.

வேலுப்பிள்ளை மகேந்திரன் .ஜே.பீ.யு.எம்,
தலைவர், வலி மேற்குப் பிரதேசசபை,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செயல் வீரன்

1985ம் ஆண்டு வழக்கம்பரை முத்துமாரி அம்மனுக்கு ஒரு பரிபாலன சபை உதயமான நாள் தொடக்கம் எனக்கும் அமரருக்கும் நெருங்கிய உறவு வளர்ந்தது.

அமரர் சித்தங்கேணி விநாயகப் பெருமான் ஆலயத்தின் நிர்வாகத்தின் முதுகெலும்பாக விளங்கியபடியால் நானும் அம்மன் ஆலய செயலாளர், அவரும் ஆலய பரிபாலனம் பற்றிப் பலமுறை கலந்துரையாடியுள்ளோம்.

பத்து வருடங்களுக்கு மேலாக விநாயகர் ஆலயத்தின் பொருளாளராகத் தொடர்ந்து கடமையாற்றினார் என்றால் எந்தளவிற்கு அவர் மக்களின் நம்பிக்கைக்குப் பாத்திரமானவர் என்பது சொல்லாமற் புலப்படும்.

ஆலய நிர்வாகத்தில் ஒரு இறுக்கத்தைக் கடைப்பிடித ததை நான் கவனித்தேன்.

எது நடக்கவேண்டுமோ? எப்ப நடக்கவேண்டுமோ? எப்படி நடக்கவேண்டுமோ? அதைத் திறம்பட நடத்திமுடித்த கர்மவீரன். அவர் போன்ற ஒருசிலர் ஆலயத் தொண்டில் தம்மை அர்ப் பணித்து வருவதால் தான் ஆலயங்கள் சிறப்புற இயங்குகின்றன.

தெய்வத் தொண்டன் மக்கள் தொண்டையும் கண்ணெனப் போற்றி கடைமையாற்றிய உத்தமர். நான் அறிந்தமட்டில் அவர் சிறந்த தன்னலமற்ற கிராம அலுவலராக விளங்கினார்.

அதிகமான கிராம அலுவலர்கள் வீடுவேறு அலுவலகம் வேறு என்று கடமையாற்றும்போது அமரர் வீட்டிலேயே அலுவல கத்தை வைத்து 24மணி நேரமும் காட்சிக்கெளியனாய் மக்களின் தேவைகளை அறிந்து திரிகரண சுத்தியுடன் தன்னாலியன்ற உதவிகளைச் செய்தார்.

எனவே சித்தன்கேணி மக்கள் விதானையார் வீடு விதானையார் கந்தோர் என்று அலைந்து திரியாமல் பிரதான வீதிக்கு சில யார் தூரத்தில் அமரரைச் சந்தித்து தங்கள் தேவை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களைப் பூர்த்தி செய்தனர்.

இவ்வகையில் அமரர் அவர்கள் ஏனைய கிராம அலுவலர்களுக்கு ஒரு சிறந்த எடுத்துக்காட்டாக விளங்கினார்.

அமரர் அவர்கள் கண்டிப்பானவர். ஆனால் அந்தக் கண்டிப்பிலும் கனிவு இருந்தது. அவரது மரணச் சடங்கில் கலந்து கொண்ட மக்கள்தொகையே அதற்குச் சான்று பகரும். மரணச் சடங்கைத் திறம்பட நடத்திமுடித்த இப்பகுதி கிராம அலுவலர்களை நினைக்கையில் அமரர் அவர்கள் தனது சக ஊழியர்களுடன் மிகவும் நன்றாகப் பழகியதை நான் எண்ணு கிறேன்.

மரணச்சடங்கில் உதவிய கிராம அலுவலர்கள் எல்லோரும் கண்ணீர் மல்கிய கண்களுடன் தங்கள் சொந்த வீட்டு அலுவல்போல ஓடியோடி அலுவல்களைச் செய்ததைக்கண்டு அவர்களே அமரர் மீது வைத்திருந்த அன்பும் அபிமானமும் எவ்வளவு என்பதை உணர்ந்தேன். அவ்வகையில் அமரர் அவர்கள் தனது சகாக்கள் மனத்தில் நீங்கா இடம்பெற்றவர்.

அமரர் 50வயதை எட்டமுன்னமே எம்மைவிட்டுப் பிரிந்தது எமக்கெல்லாம் வேதனையைக் கொடுத்தாலும் ஆங்கிலப் பழமொழி எமக்கு ஆறுதலைக் கொடுக்கிறது.

"Those whom the gods love die early" கடவுளால் நேசிக்கப்படுபவர்கள் இளமையிலேயே மரணிக்கிறார்கள்.

பிள்ளையார் தொண்டே தனது மூச்சு எனது வாழ்ந்த அமரரை அருகிலிருக்கும் பிள்ளையார் தனக்கு அருகில் அணைத்து வைத்துவிட்டார். எனவே அமரர் அவர்கள் சித்தங் கேணி பிள்ளையாரின் காலடியில் எவரும் தமது ஊனக் கண்ணால் காணாத வகையில் இருக்கிறார். ஞானக் கண் உள் ளோர் அவரை இலகுவில் அடையாளம் காண்பர்.

அமரர் அவர்கள் பேரும் புகழுடன் வாழ்ந்ததற்கு உறுதுணையாக இருந்தவர் அவருடைய அருமை மனைவி வாசுகி என்பதை எவரும் அறிவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"There is a woman behind every great man" என்ற ஆங்கிலப் பழமொழிக்கிணங்க அமரர் நவரத்தினத்தின் பெருமைக்கும் புகழுக்கும் மூலகாரணமாக இருந்தவர் வாசுகி.

நாங்கள் மணமக்களை வாழ்த்தும்போது வள்ளுவனும் வாசுகியும் போல வாழவேண்டும் என்று வாழ்த்துவது மரபு.

ஆனால் வள்ளுவனையோ வாசுகியையோ நாம் கண்டதில்லை.

எம் கண்முன்னால் ஒரு இலட்சியத் தம்பதிகள் வாழ்ந்தார்களென்றால் அது நவரத்தினம் வாசுகி என்றே அறுதியிட்டுக் கூறுவேன்.

வாசுகி பண்பாளர் நாகபத்மநாதனின் அருமைப் புதல்வி என்றபடியால் சிறந்த பழக்கங்களைக் கடைப்பிடித்து இல்லற தர்மத்தை இனிதே நடத்தினார்.

தனிப்பட்ட முறையில் வாசுகி மீது நான் வைத்திருக்கும் அன்பும் மதிப்பும் எல்லையற்றது.

அமரரின் இழப்பு ஈடுசெய்யமுடியாததொன்று என்றால் வாசுகிக்கும் பிள்ளைகளுக்கும் அது எப்படியிருக்கும் என்பதை எம்மால் நினைத்துப் பார்க்கமுடியாது. என்றாலும் படைத்தவன் எடுத்துவிட்டான் என்ற நினைவில் வாசுகி அமைதிகொள்ள வேண்டும் எனப் பணிவாக வேண்டுகிறேன்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

பண்ணாகம்,
சுழிபுரம்.

சி.ஞானச்சந்திரமூர்த்தி
ஓய்வுபெற்ற ஆசிரியர்,

நாம் அஞ்சி அஞ்சி மடியும் துன்பங்களுக் எல்லாம்
எல்லை கட்டுகின்ற சாவைப்பற்றி ஏன் அஞ்ச வேண்டும்.
- ஆஸ்கர் வையிலட்-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நவமும் நானும்

''கோவில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்'' என்பது ஆன்றோர் வாக்கு. ஆண்டவன் ஒருவர் இருக்கிறார் என்பதனை அறிய கலைக் கோவில்களாகிய கல்லூரிகளையும் இறைவனைக் காண்பதற்கு சிலைக்கோவில்களாகிய ஆலயங்களையும் ஆன்றோர் அமைத்தனர். இந்த வரிசையில் எமது கிராமமாகிய சித்தன்கேணியில் இருபெரிய ஆலயங்களாகிய சிவசிதம்பரேஸ்வரர் ஆலயமும் பெரியவளவுப் பிள்ளையார் ஆலயமும் அமைந்துள்ளது. இந்த இடத்தில் கோவில் திருத்தொண்டு புரிந்த அன்பர் நவத்தின் (நவரத்தினத்தின்) தொடர்பு எனக்கு எற்பட்டது "மருவுக மாசற்றார் கேண்மை" இது வள்ளுவர் கட்டளை.

''உடையாள் உன்தன் நடுவிருத்தி உடையாள் நடுவுள் நீயிருத்தி
அடியேன் நடுவுள் இருவீரும் இருப்பதானால் அடியேன் உன்
அடியார் நடுவுள் இருக்கும் அருளைப் புரியாய் பொன்னம் பலத்தெம்
முடியா முதலே நின்கருத்து முடியும் வண்ண முன்னின்றே''

இத்தகைய அடியார்களுள் ஒருவராகிய நவத்தின் நட்பு எனக்குக் கிடைத்தது நான் செய்த பாக்கியம். ஏறக்குறைய 25 ஆண்டுகளாக இவர் நட்பு நீடித்தது. விநாயகரின் ஆலய பரிபாலன சபையில் நவம் செயலாளராகவும் பொருளாளராகவும் கடமை புரிந்தார். இதே சபையில் சிலகாலம் நிர்வாக அங்கத்தவராய் பணிபுரிய எனக்கும் வாய்ப்புக் கிடைத்தது.

நவம் மிகவும் நல்லவர். தொண்டு புரிவதில் வல்லவர்.

இல்லறமாகிய நல்லறம் நடத்துவதற்கும் இவரது திருமண நிகழ்வுகளில் எனது குடும்பத்திற்குப் பெரும் பங்கு உண்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உத்தியோக ரீதியில் சிலகாலம் எனது சொந்த ஊராகிய சித்தன் கேணியில் இல்லாமல் இருந்தாலும் ஊருக்கு வரும்போது தவறாமல் நான் குடும்பத்துடன் நவத்தின் வீட்டுக்கு சென்று குடும்ப நலம் விசாரிப்பதுண்டு. இவ்வாறு கடந்த 14.08.2002 அன்று சந்திப்பு நடந்தபோது நவம் சிறுசுகவீனமுற்று இருந்தார். அவருக்கு ஆறுதல் கூறினோம். மறுநாளும் (15.08.2002) மாலை 3.00மணிக்கு வழமைபோல் அவர் வீட்டுக்குச் சென்று உரையாடி சுகம் விசாரித்து விடைபெற்று வீடுசெல்லும்போது இது எங்கள் இருவரதும் இறுதிச் சந்திப்பாக இருக்கும் என்று கனவிலும் நினைக்கவில்லை. அடுத்த நாள் காலை (16.08.2002) அவரது (நவத்தின்) ஆவி பிரிந்தது என்ற செய்தி அறிந்து சித்தம் கலங்கியது. எப்போதாயினும் கூற்றுவன் வருவான். அப்போதந்தக் கூற்றுவன் தன்னைப் போற்றவும் போகான். பொருளொடும் போகான். தரியான், ஒருகணம் தறுகணாளன். எழுதும் கீழ்க்கணக்கு என்னம்பர் ஈசனின் கணக்கு முடிந்துவிட்டது.

உள்ளும் புறம்பும் ஒரு தன்மைக் காட்சியினரின் நட்புக் கிடைத்ததற்கரியது. இறுதிக் காலங்களில் நவம் செய்த கோயில் திருப்பணிகளையும் சமூகத் தொண்டுகளையும் சித்தன்கேணி வாழ் மக்கள் என்றென்றும் மறக்கமுடியாது.

என்னைப் பொறுத்த மட்டில் தனிப்பட்ட முறையில் நவம் எனது குடும்பத்திற்குச் செய்த உதவிகளையும் நன்மைகளையும் என்றென்றும் மறக்கமுடியாது. இவரது பூதவுடல் மறைந்தாலும் புகழுடம்பு என்றென்றும் நிலைத்திருக்கும். அன்னாரின் ஆத்மா சாந்தியடைவதாக. குடும்ப அங்கத்தவர்களின் கவலையில் பங்கு கொண்டு எங்கள் அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்ளு கின்றோம்.

**"முகநக நட்பது நட்பன்று நெஞ்சத்து**
**அகநக நட்பதே நட்பு"** — குறள்

ந.தெட்சணாமூர்த்தி

மக்கள் வங்கி,
வவுனியா.

(பேபி அண்ணா)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிறந்த சேவையாளர்

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து" அமரராகிய திரு. சி. நவரத்தினம் அவர்களின் மறைவு எமது கிராமத்திற்கு பேரிழப் பாகும்.

சேவைக்கோர் எடுத்துக்காட்டாகத் திகழ்ந்து, மக்கள் மனதினின்றும் நீங்கா இடத்தைப் பெற்றவர்.அமரரவர்கள் வாழ்ந்த காலங்கள் குறுகியதென்றாலும் அவர் தம் பணிகள் அளப்பரியன. கடமை, நேர்மை, கடின உழைப்பு என விழுமிய பண்புகளைத் தாங்கி நிமிர்ந்த பெருமகனாகவே அமரர் ச. நவரத்தினம் விளங்கி உள்ளார்.

எங்கள் மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத்தினதும் சன சமூக நிலையத்தினதும் செயற்பாட்டிற்கும், வளர்ச்சிக்கும் வழி காட்டியாக விளங்கியமை குறிப்பிடத்தக்கதாகும்.

எங்கள் பாலர் வகுப்பிற்கு பெரிதும் ஒத்துழைப்பும் உதவியும் வழங்கி எமது விழாக்கள் சிறப்பாக நடைபெற முன்னின்று நடாத்தி வைத்தமையை நாம் என்றும் மறந்துவிட முடியாது.

எமது சிறப்பு விருந்தினராக என்றும் எங்கள் சபை சிறக்க முன்னின்று எம்மை வழிநடத்தியும் பாலர் விழாக்களின் போது இன்முகத்துடன் அவர்கள் விழாவைத் தொடக்கி கொடி யேற்றி, மங்கள விளக்கேற்றி விழாவைச் சிறப்பித்து மலர்ந்த முகத்துடன் பாலருக்குப் பரிசில்களை வழங்கி மகிழும் அந்த அன்புருவம் எம் நெஞ்சில் நிழலாடிக்கொண்டே இருக்கிறது.

சித்தன்கேணிக் கிராமத்தில் அழியாப்புகழைப் பெற்றுக் கொண்ட அமரரது இழப்பு ஈடு செய்யமுடியாதது.

விநாயகப்பெருமான் தனக்கு அயராது தொண்டாற்றிய அடியவரை தமது காலடியில் அடியவர் குழாமில் ஒருவராக அழைத்துக் கொண்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவரை இழந்து அல்லலுறும் அன்னாரது குடும்பத்தின ருக்கு ஆறுதல் கூறுவதோடு அவரது ஆத்ம சாந்திக்கும் இறை வனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!

சித்தன்கேணி.

செல்வி. லீ. மாரிமுத்து
தலைவி,
மாதர் கிராம அபிவிருத்திச் சங்கம்.
பாலர் ஆசிரியை.

## "நவம்" ஒரு "நவம்"

பண்பினாலும் அன்பினாலும்
உறவிலும் உரிமையிலும்
உழைப்பிலும் உறுதியிலும்
உயர்ந்த உயர் பிறவிதான்
நவரத்தினம்
அரச சேவையிலும் அரசியலிலும்
ஆணித்தரமான அறிவு கொண்டு உழைத்த
உத்தமன்

'உறங்குவது போலும் சாக்காடு - உறங்கி
விழிப்பது போலும் பிறப்பு'

- குறள்.

இவர் பிரிவால் நாம் பல நண்பர்கள்
துயர் கொள்கின்றோம் - அத்துடன்
இனி எப்பிறப்பில் காண்போம்.

கல்வி அறிவூட்டும் அவர் பாரியாருக்கும் பிள்ளைக ளுக்கும் ஆழ்ந்த அனுதாபம் உரித்தாகுக.

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறை அருள்வேண்டி நிற்கின்றோம்.

சபாபதி நாராயணன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தடம் பதித்த வாழ்வு
## சில நினைவுகள்..................

நண்பன் நவரத்தினம்; நீங்கள் ஒரு மெய்யான மனிதன்.

பூமிப் பந்தில் பத்துடன் பதினொன்றாக வாழ்ந்து சென்றவர் அல்ல நீங்கள்.

உங்களின் பூவுலக வாழ்வு புனிதமானது. பாமரனின் பள்ளத்துக்கு இறங்கிக் கொள்ளவும், அறிவு ஜீவியின் சிகரத்துக்கு ஏறிச் செல்லவும் எப்படித்தான் உங்களால் முடிந்தது.

இது உங்களின் சேவையில் நாம் கண்ட ஆச்சரியம்.

பூவுடன் பூவாக புயலுடன் புயலாக மாறிக்கொள்வது எப்படி?

உங்களின் வாய் வீச்சில் இதற்கு பதில் கிடைக்கும்.

பொது நிதி, மனிதாபிமானம், ஜீவகாருண்யம் இத்தனையும் உங்களின் வாழ்வில் கலந்திருக்கும்.

உங்களின் ஆன்மீக வாழ்வு அதி அற்புதம்.

பாரதிக்கும் பட்டுக்கோட்டைக்கும் என்ன நிகழ்ந்தது.

அதுவே உங்களுக்கும். என்றும் எங்களின் நினைவுகளில் நீங்கள் புதிய பூவின் வாசமாய், மேனி உரசும் தென்றலாய், ஒரு புல்லாங்குழலின் கீதமாய் நிலைத்திருக்கப் போகின்றீர்கள்.

உங்களின் ஆத்மா சாந்தி அடைவது நிச்சயம்.

சங்கானை

கிராம அலுவலர்கள்
வலி. மேற்கு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாமன் வழியில் மருகர்

அமரர் திரு. சிவசுப்பிரமணியம் நவரத்தினம் அவர்களை முதன் முதலாகச் சந்தித்து சரியாக இன்றுடன் ஒரு வருடமாகிறது.

அவர் எம்மையெல்லாம் விட்டு இவ்வளவு குறுகிய காலத்துக்குள் மறைவார் என நாம் எண்ணியிருக்கவில்லை.

அன்னார் சித்தன்கேணி கிராம அலுவலராக சீரிய பணியாற்றி எங்கள் எல்லோருடைய பாராட்டையும் பெற்றவர்.

அதேபோன்று ஆத்மீக, சமூக, அரசியல் சார்ந்த துறைகளிலும் தனது முத்திரையினையும் காத்திரமாகப் பதித்த ஒருவர்.

அவருடைய மாமனார் திரு. நாக. பத்மநாதன் அவர்களையும் நான் நன்கறிவேன்.

அவர் சமய, சமூக, தொழிற்சங்க ரீதியாக ஆற்றிய பணிகளை நாடறியும்.

அவருடைய காலடியையொற்றி அவருடைய மருகரும் அப்பணிகளைச் செவ்வனே செய்தார்.

திரு. நாக. பத்மநாதன் மறைந்து சில மாதங்களுக்குள்ளேயே தனது மருகரையும் தேவருலகில் பணிசெய்ய விரைவாக அழைத்தாரோ என எண்ணத்தோன்றுகிறது. திரு. நவரத்தினத்தின் திடீர் மறைவும்.

அன்னாரின் சடுதியான மறைவினால் துயருற்று இருக்கும் அவரது துணைவியாருக்கும் புத்திரச் செல்வங்கள் மூவருக்கும் எல்லாம் வல்ல சித்தன்கேணி ஸ்ரீ மகா கணபதிப் பிள்ளையாரின் அருளால் ஆறுதல் கிடைக்க வேண்டுகிறேன்.

சங்கானை

செ. இரத்தினம்
பிரதேச செயலர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நீங்காத நினைவில்..................

நான் கண்ட நவரத்தினம் சித்தன்கேணியை வதிவிடமாகவும் வாழ்விடமாகவும் அமைத்து அரசியல், அரசாங்க சேவை, சமய சேவை, மனிதநேய உறவு, ஆத்மீக சிந்தனை, உண்மை, நேர்மை, பயமின்மை, கடமை, கண்ணியம், கட்டுப் பாடு என்பவற்றால் பிணைக்கப்பட்ட ஒரு அபூர்வபிறவிதான் நவரத்தினம்.

எனது கணவர் திருநாவுக்கரசு வட்டுக்கோட்டைத் தொகுதி பாராளுமன்ற உறுப்பினராவதற்கு வாலிப முன்னணியில் நின்று அரும்பாடுபட்டு உழைத்தவர்.

ஒரு கொள்கை வாதியாக இருந்த இவரை எனது கணவர் முயற்சியால் அரச ஊழியராக ஆக்கிவைத்த அந்தநாள்களை எண்ணிப்பார்க்கிறேன்.

எதிர்பாராமல் ஏற்பட்ட இவரின் பிரிவு பெரும் துயர் கொண்டது.

ஆத்மா சாந்தி அடைய பிரார்த்தித்து அவர் குடும்பத்தார் மனைவி, பிள்ளைகளுக்கு எனது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிக்கிறேன்.

லண்டன் கலைமகள் திருநாவுக்கரசு
25.08.2002

தெய்வத்தை நம்பு. முழுமனதோடு நம்பு; உலகில் உனக்கினியதெனத்தோன்றும் எவற்றிலும் இனியதாக நினை. அதைவீட வேறில்லை என்று நினை. இருக்கும் போதும், நிற்கும் போதும், நடக்கும் போதும், கிடக்கும் போதும் நினை. உனது நரம்பிலும் தசையிலும் இரத்தத்திலும் தெய்வமென்னும் நினைவே நிறைவதாக. நானில்லை, கடவுளே இருக்கிறாரென எண்ணு. கடவுளைக் கும்பிடுதலே வாழ்வின் இலக்காக வைத்துக்கொள். எவன் எதை நினைக்கின்றானோ அவன் அதுவாகிறான். கடவுளை உனது உள்ளத்தில் வைத்து வளர்ப்பாயாக. எல்லாம் அவருடைய செயலாகுக. ஈற்றில் எல்லாம் அவனாகவே காணப்படும்.

- நற்சிந்தனை -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தனது மண்ணை நேசித்தவர்

அமரர் சிவசுப்பிரமணியம் நவரத்தினம் அவர்கள் தனது இருபத்தைந்தாவது வயதில் பயிர்ச்செய்கை உத்தியோகத்தராக அரசசேவையில் இணைந்தார்.

வட்டுக்கோட்டைத் தொகுதியில் அவருடன் நியமனம் பெற்றவர்களில் இருவர் தவிர்ந்த மற்றவர்கள் வெளிநாடுகளுக்கும் சேவையை விட்டும் சென்றபொழுதும் தனது மண்ணில் தொடர்ந்து கடந்த இருபத்தைந்து வருடங்களாக பயிர்ச்செய்கை உத்தியோகத்தராகவும் கிராம உத்தியோகத்தராகவும் வலிகாமம் மேற்கு பிரதேசத்தில் இறக்கும் வரை கடமையாற்றியவர் இவர் ஒருவரேயாவர்.

அரச அதிகாரிகள், அரசியல் வாதிகள், பொது சேவையாளர்கள் மத்தியில் சரியானதையும் தனக்கு சரியெனத் தோன்று வதையும் எந்த இடத்திலும் எவருக்கும் அஞ்சாமல் அழுத்தம் திருத்தமாக எடுத்துரைப்பார்.

அரச சேவையிலும் பொது சேவையிலும் ஆன்மீகத் துறையிலும் தன்னை அர்ப்பணித்துச் செயற்பட்ட திரு. சி. நவரட்ணம் அவர்கள் கிராம உத்தியோகத்தர் பதவியில் தரம் உயர்த்தப்படவிருந்த வேளையில் இவ்வுலக வாழ்க்கையிலிருந்து ஓய்வுபெற்றதையிட்டு யாழ்ப்பாண மாவட்ட கிராம உத்தியோகத்தர் சங்கம் ஆழ்ந்த கவலையடைகிறது.

அன்னாரின் ஆத்மா சாந்தியடையவும் அன்னாரது மனைவி, பிள்ளைகள் இவ்விழப்பை தாங்கிக்கொள்ளவும் அன்னாரின் இஷ்ட தெய்வமாகிய விநாயகப் பெருமான் அருள்பாலிக்கப் பிரார்த்திப்போம்.

இல. 68, பலாலி வீதி,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.

அ.தனபாலரத்தினம்
பொதுச் செயலாளர்,
யாழ்ப்பாண மாவட்ட
கிராம உத்தியோகத்தர் சங்கம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பரிதவிக்க விட்டுச் சென்றது ஏனோ?

பள்ளிப் பருவம் முதல் ஒன்றாக
இணைந்திருந்தோம் - பாதி வயதினிலே
என்னைப் பரிதவிக்க விட்டுச் சென்றது ஏனோ?
நண்பனாய், நல் ஆசிரியனாய்
பண்பிலே தெய்வமாய் - என்னை
வழிநடத்திய பாசமிகு சோதரா!
உன் பிரிவால் என் உள்ளம்
துடியாய்த் துடிக்கின்றது.
உன் அழகிய வதனத்தை எப்போது
இனிக் காண்பேன்?
சித்தன் கேணிக் கிராமத்திலே
சீரும் சிறப்புடனும் சிறப்பாக
வாழ்ந்த உன்னை
சில காலம் தன்னில் வாழவிடாமல்
சித்தன்கேணிப் பிள்ளையார்
அழைத்தது ஏனோ?
உன்பிரிவு என் உள்ளத்தில்
நீங்காத நினைவலைகளை
நிலைத்து நிற்கச் செய்துவிட்டது.
என் உயிர் உள்ளவரை
உன் நாமம் எனதுள்ளத்தில் நீங்கா
இடம்பெற்றுவிட்டது.

உன் பிரிவால் துயருறும் தாயார், மனைவி, மக்கள், உற்றார், உறவினர்கள் அனைவருக்கும் ஆறுதல் கூறுவதுடன் அமரரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கிறேன்.

பட்டினசபை வீதி,
சங்கானை.

நா. இராமநாதன்
(துரை.)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண்ணீர் அஞ்சலிப் பிரசுரங்கள் வெளியிட்டோர்.

1. ஆலய குரு, மகா கணபதிப் பிள்ளையார் கோயில்.

2. பரிபாலனசபை, மகா கணபதிப் பிள்ளையார் கோயில்

3.தேவஸ்தான குருமாரும் பரிபாலனசபையினரும் சிவன் கோவில்,சித்தன்கேணி.

4.2002 A/L Com. மாணவிகள், மகளிர் கல்லூரி, பண்டத்தரிப்பு.

5. K.J.குடும்பத்தினர், சித்தன்கேணி

6. வர்த்தக சமூகம், சித்தன்கேணி.

7. வே. இரத்தினம் G.S., பொன்னாலை.

8. கல்விச் சமூகம், மெய்கண்டான் வித்தியாலயம், பண்ணாகம்.

9. மாதர் சங்கமும் பாலர்பாடசாலையும், சித்தன்கேணி.

10. க. ஜெகதீசன் G.S.

11. அமரர் பொன். சிவபாலன் குடும்பத்தினர், சித்தன்கேணி.

12. இளைஞர் முன்னேற்றக் கழகமும் சனசமூக நிலையமும், சித்தன்கேணி

13. கலைவாணி வீதி வாழ் மக்கள், சித்தன்கேணி.

14. நண்பன் துரையும் குடும்பத்தினரும்.

15. யாழ் மாவட்ட கிராம உத்தியோகத்தர் சங்கம்.

16. அதிபர், ஆசிரியர்கள், சிற்றூழியர்கள் - மகளிர் கல்லூரி, பண்டத்தரிப்பு

17. நலன்புரிச்சங்கம், பிரதேச செயலகம், சங்கானை.

18. O/L மாணவர்கள் 2002, யாழ்ப்பாணக் கல்லூரி, வட்டுக்கோட்டை

19. தமிழர் விடுதலைக் கூட்டணி, யாழ் மாவட்டம்.

20. கிராம உத்தியோகத்தர்கள், வலி மேற்கு.

21. சதாசிவம் ஐங்கரன், நிர்வாகி, சப்றா.


22. தரம் 11 மாணவர்கள். சப்றா கல்வி நிறுவனம்.

23.நா. இராமநாதன், பட்டினசபை வீதி, சங்கானை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவிலல்



எமது குடும்ப விளக்கு அணைந்த செய்திகேட்டு உடன் வந்து பலவழிகளிலும் ஆறுதல் தந்து உதவியவர்கள்,

தபால்,தொலைபேசி, தொலைநகல் மூலம் அனுதாபம் தெரிவித்தவர்கள்,

கண்ணீர் அஞ்சலிப் பிரசுரங்கள் அன்போடு வெளியிட்டவர்கள்,

மலர் வளையங்கள், மலர் மாலைகள் வழங்கியவர்கள், இரங்கலுரை வழங்கியவர்கள்,

ஒலிபெருக்கி மூலம் சோகத்தை வெளியிட்டவர்கள்,

'உதயன்' பத்திரிகையில் இரங்கல் செய்திகளை வழங்கியவர்கள்.

இறுதிக் கிரியைகள் நடந்தேறத் தோளோடு தோள் கொடுத்து உதவிய உற்றார், உறவினர், அன்பர்கள், அயலவர்கள், தமிழர் விடுதலைக் கூட்டணி அமைப்பினர் அனைவருக்கும்,

சபிண்டீகரண நிகழ்ச்சிகளிலும், வீட்டுக் கிருத்தியப் பிரார்த்தனையிலும் பங்கு கொண்டு சிறப்பித்தவர்களுக்கும்,


இம்மலரைக் குறுகிய காலத்தில் சிறப்பாக அச்சிட்டு உதவிய பாரதி பதிப்பகத்தாருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவிக்கின்றோம்.

சித்தன்கேணி
15.09.2002.

மனைவி, பிள்ளைகள்,
தாயார், சகோதரர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வமிசாவளி




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறவாத இன்ப அன்பு வேண்டிப்
பின் வேண்டுகின்றார்
பிறவாமை வேண்டும்
மீண்டும் பிறப்பு உண்டேல்
உன்னை என்றும்
மறவாமை வேண்டும்
இன்னும் வேண்டும் நான்
மகிழ்ந்து பாடி அறவாநீ
ஆடும்போது உன் அடியின்கீழ் இருக்க
என்றார்.

- காரைக்கால் அம்மையார்-

*Bharathi Pathippakam, 430, K.K.S. Road, Jaffna.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org